# கடந்த கால நினைவுகளின் துடைத்தழிப்பு



## இலங்கையின் வட-கிழக்கில் நினைவிற் பதித்தலின் வலிந்தொடுக்கல்

PEARL

# கடந்த கால நினைவுகளின் துடைத்தழிப்பு

## இலங்கையின் வட-கிழக்கில் நினைவிற் பதித்தலின் வலிந்தொடுக்கல்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| ஏற்பு | 06 |
| சொற்கோவை | 07 |
| I. அறிமுகம் | 08 |
| II. நினைவிற் பதித்தல் நோக்கிய மனப்பாங்கு | 09 |
| III. நினைவு கூருதலுக்கான தடைகள் | 23 |
| IV. நினைவு கூருவதற்கான உரிமை | 33 |
| V. முடிவுரை | 35 |
| பின்னிணைப்பு | 37 |

# ஏற்பு

இந்த அறிக்கையானது ஒடுக்குமுறையின் முன்னே தொடர்ந்தும் நிமிர்ந்து நிற்கும் அளப்பரிய துணிச்சல் மிக்க வட-கிழக்கு மக்களின்றிச் சாத்தியமாயிராது. இன்னும் வலிந்து ஒடுக்கப்பட்டு வரும் இவ்விவகாரம் தொடர்பாக பாதுகாப்பு அச்சுறுத்தல்களின் மத்தியிலும் தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள அவர்கள் முன் வந்திருந்தார்கள். அத்தகையோரின் பங்களிப்பினை பேர்ள் விதந்து பாராட்டுவதோடு அவர்களுடைய உதவிக்கு என்றும் நன்றியுடையதாகவும் இருக்கிறது.

இந்த அறிக்கைக்கான ஆய்வு மற்றும் உருவாக்க முயற்சிகளின் போது முடிவேயில்லாத ஆதரவு மற்றும் வழிகாட்டல்களை வழங்கிய ஹாவர்ட் பல்கலைக்கழகத்தின் கலாநிதி கேற் குறோணின்- பேர்மான் அவர்களுக்கு பேர்ள் - நன்றி கூற விழைகிறது.

இந்த அறிக்கைக்கான ஆய்வுகளை மேற்கொள்ளும் வலுவைத் தந்த அமெரிக்க தமிழ் அரசியல் செயற்பாட்டுப் பேரவைக்கும் பேர்ள் தன் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

# சொற்கோவை

| | |
|---|---|
| CID | - குற்றவியல் விசாரணைத் திணைக்களம் |
| CSD | - குடிசார்பினர் பாதுகாப்புத் திணைக்களம் |
| IPKF | - இந்திய அமைதி காக்கும் படை |
| LTTE | - தமிழீழ விடுதலைப் புலிகள் |
| NPC | - வடக்கு மாகாண சபை |
| PLOTE | - தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு |
| SLA | - சிறிலங்கா இராணுவம் |
| SLAF | - சிறிலங்கா வான்படை |
| STF | - சிறப்பு அதிரடிப் படை |
| TELO | - தமிழ் ஈழ விடுதலை இயக்கம் |
| TNA | - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு |
| UNHRC | - ஐ.நா மனித உரிமைகள் பேரவை |

# I. அறிமுகம்

மனித உரிமை மீறல்கள், பாரிய அட்டூழியங்கள், மற்றும் அரசியல் வன்செயல்களிலிருந்து பிழைத்திருப்போருக்குக் கடந்த காலம் என்பது எப்போதும் நிகழ்காலமாகவே இருக்கும். ஆனால் இலங்கைத் தீவில் பல தசாப்தங்கள் தொடர்ந்த போரின்போது மக்களும் போராளிகளுமாக பல்லாயிரக் கணக்கான உயிர்களின இழப்பைக்கண்ட வட-கிழக்குத் தமிழ்ப் பிராந்தியங்களில் நினைவு கூருதலானது மிகவும் சச்சரவுக்குரியதாகவே இருந்து வருகிறது. மக்கள் ஒன்றுகூடுதல் மீதான கட்டுப்பாடுகள், ஒடுக்குமுறை மிக்க அரச கண்காணிப்பு, ஒன்றுடனொன்று போட்டியிடும் நினைவிற் பதித்தல் முயற்சிகள் என்பனவற்றால் பாதிக்கப்பட்டவர்களும் பிழைத்திருப்போரும் கடந்த காலத்தை நினைவுகூர மேற்கொள்ளும் முயற்சிகள நசுக்கப் பட்டுவரும் நிலையே காணப்படுகிறது.. 2015 ஜனவரியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்கு பின் ஏற்பட்டுள்ள சில முன்னேற்றங்கட்கு மத்தியிலும், நினைவு கூருதல் உள்ளிட்டதாக நாளாந்த வாழ்க்கையின் மேல் குவிகின்ற இராணுவத்தின் இருப்பும், குடிசார் செயற்பாடுகளில் வக்கிரமான முறையில் இடம்பெறுகின்ற அதன் தலையீடுகளும் தொடர்கின்றன. வட-கிழக்கு மக்கள் தமக்குரிய மரணித்தவர்களைக் கௌரவிக்க முயலும் போதெல்லாம் இராணுவத்தினரின் தொல்லைகளை அனுபவிப்பது வழமையாகி விட்டது. எதிர் விளைவுகள் குறித்த பயத்தின் காரணமாக, நினைவு கூரும் செயற்பாடுகளில் பங்கு கொள்வதையோ, நடந்தேறியவை பற்றித் தங்கள் பிள்ளைகளுடன் பேசுவதையோ, அல்லது தத்தமது குடியேற்றங்களில் அரசினாலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ள வெற்றிச் சின்னங்களைப் பகிரங்கமாக எதிர்ப்பதையோ மக்கள் தவிர்த்து வருகிறார்கள்

2016 யூலை ஒகஸ்ற் மாதங்களின்போது பேர்ள் - இனுடைய ஆய்வாளர்கள், நினைவிற் பதித்தல் பற்றியும் நினைவு கூருதல் தொடர்பாக எதிர்கொள்ளப் படும் தடைகள் பற்றியும் வடக்கு கிழக்கில் வதியும் போரால் பாதிக்கப் பட்டவர்களிடையே அண்ணளவாக 50 தனிநபர்களுடன் பேசினார்கள். இவ் உரையாடல்கள் ஒருவரோடொருவராகவும் சிறு குழுக்களாகவும் அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய ஏழு மாவட்டங்களில் தேற்கொள்ளப் பட்டன. மரணித்துப் போய்விட்ட குடிசார் மக்கள் மற்றும் போராளிகளின் உறவினர்கள், காணாமல் போய்விட்டவர்களின் உறவினர்கள், முன்னாள் போராளிகள், குடிசார் சமூகத்தின் உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகள் உள்ளிட்ட பரந்த மக்கள் சமூகத்தின் குறுக்கு வெட்டான பிரதிநிதிகளை ஆய்வாளர்கள் சந்தித்தனர்.

ஒரு அரை-கட்டமைப்பு செய்யப்பட்ட நேர்காணல் அணுகு முறை, அத்துடன் ஆங்கிலம் அல்லது தமிழில் உரையாடுவதற்கு நேர்காணல் செய்யப்பட்டவர் கொண்டிருந்த விருப்பத் தெரிவை அனுசரித்தல் முதலியவற்றைக் கைக்கொண்டு பின்வரும் விடயங்களில் மையம் கொண்டவையான ஒரு தொகுதி கேள்விகளை ஆய்வாளர்கள் கேட்டார்கள். நினைவுகூருதலின் அர்த்தம், நிகழ்கால நினைவுகூரல் நடைமுறைகள், நினைவு கூரலுக்குள்ள தடைகள், முக்கியமான அமைவிடங்களைப் பேணுதல், எதிர்கால சந்ததியினருக்கு வரலாற்று ரீதியான அறிவைக் கையளித்தல் மற்றும் சிறிலங்கா அரசால் நிகழ்காலத்தில் பேணப்படும் வெற்றி நினைவுச் சின்னங்களின் இருப்பு பற்றிய கருத்து பிரதிபலிப்பு ஆகியவையே அவையாகும். நேர்காணப்பட்டவர்களில் அனேகமானோர் தங்கள் அடையாளம் அந்தரங்கமாக வைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே பேசினார்கள். எனவே பின் வரும் பக்கங்களிலே இருக்குமிடம் தவிர்ந்த ஏனைய விவரங்களில், ஆகக் குறைந்த அளவுக்கு அடையாளத்தை வெளிப்படுத்தக் கூடிய விதத்திலே அவற்றைப் பயன்படுத்தி இருக்கிறோம்.

இந்த அறிக்கையானது, மேற்படி நேர்காணலில் கண்டுகொள்ளப்பட்டவற்றையும், இரு வாரங்களாக வட-கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட கள அவதானிப்புகளையும் விவரிக்கின்றது. இதற்கு அடுத்த பகுதியானது, போரினால் பாதிக்கப்பட்டவர்களிடையே காணப்படும் நினைவிற் பதித்தல் தொடர்பான நம்பிக்கைகள் மற்றும் வழக்கங்கள் தொடர்பான ஒரு மேலோட்டமான நோக்கை முன்வைக்கிறது. மரணித்துவிட்ட பொதுமக்கள் மற்றும் போராளிகள் எனும் இரு தரப்பினரும் நிகழ்காலத்தில் எவ்வாறு நினைவு கூரப்படுகிறார்கள் என்பதும் தப்பியிருப்பவர்கள் குறிக்கப்பட்ட தங்கள் அன்புக்குரியவர்களை எவ்வாறு நினைவு கூரவிரும்புகிறார்கள் என்பவைகளைப் பற்றியும் விளக்குகிறது. மூன்றாவது பகுதியானது நினைவிற் பதித்தல் செயற்பாடுகள் வலிந்து ஒடுக்கப்படுதல் மற்றும் முன்னைய போர் வலயங்களிலே, அரசு வெற்றிச் சின்னங்களை நிர்மாணிப்பதன் மூலம் மாற்று வரலாறுகளை

உட்புகுத்துதல் உள்ளிட்டதாக நினைவிற் பதித்தலுக்கான தடைகள் பற்றி ஆராய்கிறது. நான்காவது பகுதியானது சர்வதேச சட்ட மற்றும் நடைமுறைகளில் உள்ள நினைவு கூருதலுக்கான உரிமையை இச் சூழ்நிலைகள் எவ்வாறு பாதிக்கின்றன என்பது பற்றிய கண்ணோட்டத்தை தருகிறது. சிறிலங்காவில் நம்பகத்தன்மை கொண்ட பொறுப்புக் கூறலும் அர்த்தமுள்ள நல்லிணக்கமும் ஏற்படுத்தும் முயற்சிகளில் நினைவு கூருதல் வகிக்கும் காத்திரமான வகிபாகத்தை பகுப்பாய்வு செய்வதன் மூலம் இவ் அறிக்கை முடிவுக்கு வருகிறது.

**"அவர்கள் எம்மைத் துடைத்தழித்து விட்டுக் கொண்டாடுகிறார்கள்"** – *(அம்பாறை )*

## II. நினைவிற் பதித்தல் தொடர்பான மனப்பாங்குகள்

வட-கிழக்கில் வாழும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களோடு மேற்கொண்ட நேர்காணல்களின் போது பல கருப்பொருட்கள் வெளிப்பட்டன. மரணித்து போய்விட்ட தங்களுடைய பிள்ளைகளும் உறவினர்களும், பொதுமக்களாய் இருந்தாலென்ன அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லது வேறெந்த ஆயுதம் தரித்த குழுக்களினது போராளிகளாய் இருந்தாலென்ன, அவர்கள் இழப்புத் துயரை சுதந்திரமாக நினைவு கூரக்கூடியதாக இருப்பது தங்களுக்கு எத்தகைய முக்கியத்துவம்மிக்கது என்பதை நேர்காணப்பட்டவர்கள் வலியுறுத்தினார்கள். மே 18இல் போர் முடிவுக்கு வந்த போது நிகழ்ந்த மக்களின் பாரிய உயிரிழப்புகளை மட்டுமல்லாது, கடந்த காலங்களில் தொகைகளில் இடம் பெற்ற போராளிகள் அல்லாத, குடிசார் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகளையும் வருடாந்தம் நினைவு கூஉவதன் முக்கியத்துவம் பற்றியும் அவர்கள் முனைப்பாகச் சுட்டிக் காட்டினார்கள். எவ்வாறெனினும், அனேகமானவர்களைப் பொறுத்தவரை, யுத்தமிட்டு மடிந்த போராளிகளைப் பகிரங்கமாக நினைவு கூர அவர்களுக்கு இருக்கும் ஆர்வமே அதியுயர் அக்கறையாக இருந்தது. குடிசார் மக்கள் மற்றும் போராளிகளாகிய இருதரப்பினரதும் குடும்ப உறுப்பினர்கள் தமது கூட்டான நினைவிற் பதித்தலின்முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தியதோடு, பல சந்தர்ப்பங்களிலே போர்நிறுத்த காலத்தின் போது வழக்கில் இருந்த சமூகரீதியான துக்கம் கொண்டாடும் நடைமுறைகள் குறித்து தாங்கள் கொண்டிருந்த நாட்டத்தையும் வெளிப்படுத்தினாஉகள். படுகொலைகள் இடம்பெற்ற களங்களின் பேணுகை மற்றும் அருங்காட்சியகம் ஒன்றை உருவாக்கல் முதலியவை ஊடாக வரலாற்று ரீதியான நினைவுகளை பாதுகாப்பதற்கும் அடுத்த தலைமுறைக்கு அவற்றை கையளிப்பதிலும் அவர்கள் கொண்டிருந்த ஆர்வத்தை அவர்கள் தெளிவாக வெளிப்படுத்தினார்கள்.

### குடிசார் மக்களின் மரணங்களை நினைவு கூருதல்

**"அவர்களை எவ்வாறு மறப்போம்?"** *(முல்லைத்தீவு)*

சிறிலங்காவில் இடம் பெற்ற நீண்ட போர்க்காலம் முழுதும் வட-கிழக்கை சேர்ந்த பொதுமக்கள்பெரும் துன்பப் பட்டிருக்கிறார்கள். இத் தீவானது, பல்வேறு செயற்பாட்டாளர்கள் மேற்கொண்ட குடிசார் மக்களை பெருந் தொகையில் படுகொலை செய்த பற்பல நிகழ்வுகளைக் கண்டுள்ளது. அரச பாதுகாப்பு படைகளின் பல்வேறு பிரிவுகள், தமிழ் போராளிக் குழுக்கள், சிங்களக் கும்பல்கள், முஸ்லீம் ஊஉகாவற் படையினர் மற்றும் இந்திய அமைதிகாக்கும் படையினரே அவர்களாகும். நேர்காணப்பட்ட ஒவ்வொரு நபரும் 2009 ம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்து கொண்டிருந்த போது முள்ளி வாய்க்காலில் குடிமக்கள் பெரும் தொகைகளில் படுகொலை செய்யப்பட்டதை நினைவு கூரவேண்டியதன் தேவை பற்றிக் குறிப்பிட்டார்கள். பொதுமக்களின் மரணங்கள் பற்றிய துக்க அவதானிப்புக்கான மிக முக்கியமான நாளாக மே 18 ஐ அவர்கள் முன்னிலைப்படுத்திக் காட்டியதோடு ஒரு தப்பியிருப்பவரின் வார்த்தைகளில் சொல்வதானால் "எந்த விதமான தடைகளுமின்றி இதனை செய்ய நாங்கள் அனுமதிக்கப்பட வேண்டும்". (கிளிநொச்சி) என்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.

நேர்காணலின் பொது பதிலிளித்தவர்களில் பலரும் கீழே பட்டியலிடப் பட்டிருக்கும், வேறு பல படுகொலைகளையும் குறிப்பிட்டு, அவைகளும் நினைவு கூரப்பட வேண்டிய முக்கிய நாட்கள் என்று அடையாளம் காட்டினார்கள். பரந்து பட்ட விதத்திலே பெருமளவில் குறிப்பிடப்பட்ட நினைவு கூருதலுக்கான நிகழ்வாகக் "கறுப்பு

யூலை" இருந்தது. பேஉளினுடைய ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலப் பரப்பினுள் இந்த சம்பவத்தின் நினைவு நாள் வந்ததும் இதற்கு ஒரு பகுதிக் காரணமாக இருக்கலாம். இப்படிக் குறிப்பிடப்பட்டவற்றில் பெரும்பான்மையானவை தமிழ் மக்களுக்கு எதிராக அரசுப் படைகள் நிகழ்திய குற்றங்களாகவிருந்த அதேவேளை, பதிலளித்தோரில் பலர் அரசியல் ரீதியாகவும் போராட்ட ரீதியாகவும் எதிர்தரப்பான தமிழரையும் முஸ்லீம் குடிமக்களையும், டுவுவுநு யினா் கொலை செய்த விவகாரத்தை எழுப்பி இருப்பதையும் கவனிப்பது முக்கியமானதாகும். இந் நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசிய நேர்காணப்பட்டவாகளில் ஒருவர் "அரச வன்முறையைவிட உள்ளக வன்முறையைக் கையாள்வதே கடினமானதாகும்" என்றாா்.



முள்ளிவாய்க்கால் கடற்கரை

## அட்டவணை 1

நேர்காணப்பட்டவர்களால் எழுப்பப்பட்ட வரலாற்று ரீதியான படுகொலைகள்

| திகதிகள் | படுகொலை | அறிக்கையிடப் பட்ட நிகழ்த்தியோர் | இறப்பு எண்ணிக்கை | விவரங்கள் |
|---|---|---|---|---|
| யூலை 23-25 1983 | கறுப்பு யூலை | சிங்கள கும்பல்கள் மற்றும் பாதுகாப்பு படைகள் | 3,000+ | 1983 யூலையின் இறுதிப் பகுதியிலே இன்றைய திகதிவரை நிகழ்த்தப்பட்டவற்றிலேயே மிகப்பெரிய படுகொலையிலே மூன்று நாட்களில் நிகழ்ந்த பேரழிவில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். கொழும்பிலும் தமிழ் மக்கள் வாழ்ந்த தெற்கின் வேறு பகுதிகளிலும் சிங்கள மக்கள் வன்முறைச் செயல்களில் இறங்கினார்கள். இந்த வன்முறையானது சிறிலங்காவை நிரந்தரமாகவே மாற்றி விட்டது. இதன் விளைவாக ஆயிரக கணக்கான தமிழர்கள் நாட்டை விட்டு தப்பியோடினார்கள் அல்லது போராளி குழுக்களுடன் இணைந்து கொண்டார்கள்.[2] |
| ஆவணி 02 1989 | வல்வெட்டித்துறை படுகொலை | இந்திய அமைதிகாக்கும் படைகள் | 60 | IPKF ஆனது வல்வெட்டித் துறையில் அண்ணளவாக 60 தமிழர்களை கொன்றதோடு, அப்பாவிப் பொதுமக்களை சுட்டு பல வீடுகளையும் எரித்தனர்.[3] |
| 1980 களின் பிற்கூறுகள் | அரசியல் மற்றும் போராளி எதிரிகளை LTTE கொன்றது. | LTTE | தெரியாது | LTTE ஆனது போட்டி போராளிக் குழுக்களின் நூற்றுக் கணக்கான உறுப்பினர்களை கொன்றதாக எண்ணப்படுகிறது. இவற்றுள் சில குழுக்களுக்கு இந்தியா ஆதரவு வழங்கியது. ரெலோ ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் வேறு குழுக்களின் உறுப்பினஉகள் வட-கிழக்கு மற்றும் தமிழ்நாடு இரு பகுதிகளிலும் கொல்லப் பட்டார்கள் |
| ஓகஸ்ட 12, 1990 | வீரமுனை படுகொலை | முஸ்லீம் ஊர்காவல் படையினர் | 55 | தமிழ் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் முதலியோர் சிறிலங்காவின் பாதுகாப்பு படையினருடன் நெருக்கமாக இணைந்து செயற்பட்ட முஸ்லீம் ஊர்காவல் படையினர், ஆயுதம் தரித்த மக்கள் படையினரால் அம்பாறையின் வீரமுனையில் கொல்லப்பட்டனர். வீரமுனையையும் அதனை சூழ்ந்திருந்த கிராமங்களையும் சேர்ந்த குடிசார் மக்கள் நகரத்தில் இருந்த ஒரு கோவிலிலும் பாடசாலைகளிலும் அடைக்கலம் தேடிக் கொண்டிருந்த போது அங்கு பிரவேசித்த ஊர்காவற்படையினர் அவர்களைத் தாக்கினார்கள்.[4] |

1.இந்தப் பட்டியலானது நேர்காணப்பட்டவர்களினால் குறிப்பிடப்பட்ட படுகொலைகளையே உள்ளடக்குகிற தென்பதால் சிறிலங்காவில் நிகழ்ந்த அனைத்து படுகொலைகளையும் உள்டக்கிய விரிவான பட்டியல் அல்ல

2."கறுப்பு யூலை நினைவுகூரப்படுகிறது" தமிழ் காடியன் யூலை 22, 2015, எட்டக்கூடிய இடம் :
http.//www.tamilguardian.com /content/black-july-1983-remembered?articleid=11617.

3.அறிக்கை இல. 1. அதிகாரம் 3.வடமராட்சி ஏப்ரல்ஃஓகஸ்ற் 1989 "மனித உரிமைகளுக்கான பல்கலைகழக ஆசிரியர் சங்கம் (யாழ்ப்பாணம்) ஜனவரி 1989,எட்டக்கூடிய இடம்:
http.//www.uthr.org/Reports/Report3/.htm.

| திகதிகள் | படுகொலைகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்த்தியோர் | இறப்பு எண்ணிக்கை | விவரங்கள் |
|---|---|---|---|---|
| செப்ரெம்பர் 05 1990 | வந்தாறு மூலைகிழக்கு பல்கலைகழக படுகொலை | சிறிலங்கா ராணுவம் | 174 | "கறுப்பு செப்ரெம்பர்" பொது மக்களின் படுகொலையின்[5] ஒரு பகுதியாக கிழக்கு பல்கலைகழகத்தில் தஞ்சம் புகுந்திருந்த தமிழ் ஏதிலிகள் சிறிலங்கா ராணுவத்தால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். |
| செப்ரெம்பர் 09 1990 | சத்துருக் கொண்டான் படுகொலை | சிறிலங்கா ராணுவம் | 184 | சிறிலங்கா ராணுவம் மேற்கொண்ட "கறுப்பு செப்ரெம்பர்" பொதுமக்கள் படுகொலையின் ஒரு பகுதியாக மட்டக்களப்பின் மூன்று கிராமங்களில் தமிழ் ஏதிலிகள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் 47 பேர் 10 வயதுக்கும் குறைந்தவர்களாகும். இராணுவத்தினர் சத்துருக் கொண்டான் மற்றும் அருகிலுள்ள கிராமங்களுக்குள் புகுந்து, குடிசார் மக்களை அப்பகுதியிலிருந்த ஒரு இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்று அங்கு அவர்களை படுகொலை செய்தார்கள். ஒரு ஆண் மட்டும் தப்பிப் பிழைத்தார்.[6] |

4.வீரமுனையில் தமிழர்கள் கொலை செய்யப்பட்டதன் 21ம் ஆண்டு நினைவு கூரப்பட்டது" தமிழ் நெற், ஒகஸ்ற் 13, 2011. எட்டக் கூடிய இடம்: http.//www.tamilnet .com/art.html?catid=13&artid =34299.

5. மட்டக்களப்பு பல்கலைகழகத்தில் "கறுப்பு செப்ரெம்பர்" ஐ நினைவு கூரல் தமிழ் நெற் செப். 05, 2002 எட்டக்கூடிய இடம்: http.//www.tamilnet .com/art.html?catid=13&artid =7437

6. "மட்டக்களப்பு படுகொலையில் பலியானவர்களை நினைவு கூரல்" தமிழ் நெற், செப்.09, 2000 எட்டக்கூடிய இடம் : http.//www.tamilnet .com/art.html?catid=13&artid =5390.

| திகதிகள் | படுகொலைகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்த்தியோர் | இறப்பு எண்ணிக்கை | விவரங்கள் |
|---|---|---|---|---|
| யூன் 12 1991 | கொக்கட்டி சோலை | சிறிலங்கா ராணுவம் | 126 | கிழக்கு புற கிராமமான கொக்கட்டிச் சோலையில் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட ஒரு படுகொலைத் தொடரில் ஆகக் குறைந்தது 126 கிராம வாசிகள் கொலை செய்யப்பட்டனர்.(7) |
| யூலை 09 1995 | நவாலி தேவாலய குண்டு வீச்சு | சிறிலங்கா வான்படை | 125 | சென் பீற்றாஸ் ஆலயம் மற்றும் சென் போல் ஆலயம் முதலியவற்றின் மீது சிறிலங்கா வான் படையினர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் தஞ்சம் புகுந்திருந்த தமிழ் ஏதிலிகள் கொல்லப் பட்டனர். அதற்கு முன்னதாக சிறிலங்கா ராணுவம் வணக்கஸ் தலங்களில் தஞ்சம் புகுமாறு தூண்டும் துண்டுப் பிரசுரங்களை வினியோகத்திருந்தது.(8) |
| பெப்ரவரி 11 1996 | குமாரபுரம் படுகொலை | சிறிலங்கா ராணுவம் | 24 | திருகோணமலை மாவட்டத்தின் மூதூரிலுள்ள குமார புரத்தில் 14 சிறுவர்கள் உள்ளிட்ட தமிழ் கிராம வாசிகள் சிறிலங்கா படை வீரர்களால் கொல்லப் பட்டார்கள். இரண்டு பதின்ம வயது பெண்பிள்ளைகள் கூட்டு வன்புணர்வு செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. 30வரையான தமிழர்கள் கடுமையான காயங்களுக்கு உட்பட்டனர்.(9) |
| பெப்ரவரி 3 . 1998 | தம்பலகாமம் படுகொலை | சிறிலங்கா பொலிஸ் சிங்கள ஊர்காவல் படையினர் | 8 | தமிழ் குடிசார் மக்கள் ஒரு பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டு பொலிசார் மற்றும் அல்லது சிங்கள ஊர்காவல் படையினரால் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களுள் ஒரு 13 வயது பிள்ளையும் ஒரு 17 வயது பிள்ளையும் அடங்குகிறார்கள். |

7.அறிக்கை இல. 8. அதிகாரம் 3, கொக்கட்டிச் சோலை படுகொலையும் அதற்குப் பின்பும்" மனித உரிமைகளுக்கான பல்கலைகழக ஆசிரியர் சங்கம். (யாழ்ப்பாணம்) ஒகஸ்ற் 28 1991 எட்டக்கூடிய இடம். :
http: // www.uthr. org/reports/report8/chapter3.htm.

8.சிறிலங்கா குடிசார் மக்களை கொல்வதை நிறுத்து" மனித உரிமை கண்காணிப்பகம் யூலை 1. 1995. எட்டக்கூடிய இடம்.
https://www.hrw.org/reports/1995/srilanka.htm.

9.குமாரபுரம் படுகொலையில் பலியானவர்களை நினைவு கூருதல்" தமிழ் நெற் பெப் 11. 2004. எட்டக்கூடிய இடம்.
http.//www.tamilnet .com/art.html?catid=13&artid =11196.

10. சிறிலங்கா அரச படையினர் 8 குடிசார் மக்களை கொன்றனர்.- நீதி இப்போது தேவை சர்வதேச மன்னிபச் சபை. பெப்ர.3.1998 எட்டக்கூடிய இடம்.
https://web.archive.org/web/20040131200404/http://wep.amesty.org/library/Index/ENGASA 370021998?open& of=ENG-254.

| திகதிகள் | படுகொலைகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்த்தியோா் | இறப்பு எண்ணிக்கை | விவரங்கள் |
|---|---|---|---|---|
| ஜனவரி 2 2006 | திருகோணமலை | சிறப்பு அதிர படை | 05 | ஜனவரி 02 2006 அன்று ஐந்து தமிழ் உயர் பாடசாலை மாணவர்கள் திருகோணமலை நகரில் ஏவுகு உறுப்பினர்களால் சுட்டுக் கொல்லப பட்டார்கள். அப்போது ஆட்சியிலிருந்த அரசு இந்த மாணவர்கள் டுவுவுறு உறுப்பி னர்கள் என்றும் படைத் துறையினா் மீது கைக்குண்டை எறிய திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும் கூறியது. இந்த கொலைகள் பரவலான சர்வதேச கண்டன அலைகளை எழுப்பி விட்டது. சர்வதேச மன்னிப்பு சபையும் கொல்லப் பட்டவர்களில் ஒருவரது தந்தையும் கொலைகளுக்கு நீதி வேண்டி போராட்டங் களை தொடர்ந்தார்கள்.(11) |
| ஒகஸ்ட 4அல்லது 5 2006 | ACF படுகொலைகள் | சிறிலங்கா ராணுவம் | 17 | ஒரு மனித நேய நிறுவனமான அக்ஷன் கொண்றேலா பெய்ம் இன் பணியாளர்கள் 2006 ஒகஸ்ட முற்கூறுகளில் படைத் துறையினரால் கொல்லப்பட்டார்கள். பலி யானவர்களில் 16 பேர் தமிழர்கள் ஒருவர் முஸ்லீமாவார்.(12) |
| ஒகஸட 14 2006 | செஞ்சோலை குண்டு வீச்சு | சிறிலங்கா வான்படை | 61 | செஞ்சோலை ஆதரவற்றோர் இல்லத்தில் ஒரு பயிற்சிப் பட்டறையில் பங்கு கொண்டிருந்த மாணவிகள் இலக்கு வைக்கப்பட்டனர். முதலில் இப்படி ஒரு குண்டு வீச்சு நடந்ததையே சிறிலங்கா அரசு மறுத்தது. பின்பு சிறுவர் போா வீரர்கள் பயிற்றப்படும் LTTE இன் ஒரு நிலையம் என கூறியது.(13) |

11.அவர்கள் எனது மகனைக் கொன்றார்கள்", சர்வதேச மன்னிப்பு சபை, ஒகஸ்ற் 15, 2013 எட்டக்கூடிய இடம் https ://www.amnesty.org/en/latest/campaigns/2013/08/they –killed-my –son /

12.சிறிலங்கா படுகொலைகள் தொடர்பான ACF ஆரம்ப அறிக்கை மற்றும் குறிப்புகள்" அக்ஷன் கொண்றா பெய்ம் ஒகஸ்ற் 29, 2006. http:// www.actionagainsthunger.org/blog/ acf –notes –initial-report-sri-lankan-massacre-awaits-official –investigation

13. செஞ்சோலை படுகொலைகள் திரட்டும் பிரதிபலிப்புகளும் வுயஅடை யெவழைெ .ழுசப. ஆவணி 2006 எட்டக்கூடிய இடம் http ://tamilnation.co/indictment/continuingwar/060814chencholai.htm

இந்த முரண்பாட்டுக் காலம் முழுவதும் தமிழ் ஊடகவியலாளர்கள் இலக்கு வைக்கப்பட்டனர். 2004 முதல் 2010 வரை தீவெங்கிலும் ஆகக் குறைந்தது 48 ஊடகவியலாளர் கொல்லப்பட்டார்கள். இவர்களுள் 41 பேர் தமிழர்கள்.[14] தமிழ் சிவிலியன்களுக்கு எதிரான வன்செயல்கள் தொடர்பான சில பகிரங்கமான நினைவு கூரல்களில் ஒன்றாக, யாழ்ப்பாணத்தின் அதிகம் வாசிக்கப்படும் செய்தித்தாளான உதயன் அலுவலகம் மீதான தாக்குதலை ஆவணப்படுத்தும் சிறிய அருங்காட்சியகம் இருக்கிறது. குறித்த காலப் பகுதியிலே இச்செய்தித் தாள் தனது பணியாளர்களைரை இழந்திருப்பதோடு அது 1985 ம் ஆண்டில் நிறுவப்பட்டதிலிருந்து அதனுடைய அதிகாரிகள் சிறிலங்கா அரசு, தமிழ் துணை இராணுவப் படையினர் மற்றும் இந்திய அமைதி காக்கும் படையினரால் பலமுறை இலக்கு வைத்து தாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த தாக்குதல்களை நினைவு கூரும் விதத்திலே உரிமையாளர்கள் சுவரில் இருக்கும் துப்பாக்கி சூட்டு அடையாளங்களையும், சேதமடைந்த உபகரணங்களையும் பேணி வருகிறார்கள். படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் புகைப்படங்கள் சுவர்களை அலங்கரிக்கின்றன. முன்னாள் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமறன் மற்றும் ஐநாவுக்கான அமெரிக்க தூதுவர் சமந்தா பவர் உள்ளிட்ட சர்வதேச உயர் மட்ட அதிகாரிகள் தங்கள் யாழ்ப்பாண வருகையின் போது கட்டாயமான தரிப்பிடமாக உதயனுக்கு வந்திருக்கிறார்கள்.[15],[16]



இந்த முரண்பாட்டுக் காலம் முழுவதும் உதயன் பலமுறை தாக்கப் பட்டிருக்கிறதுடன் சேதமுற்ற உபகரணங்களைப் பேணிவருகிறது (பேர்ள், யூலை 2016)

---

14. "ஊடகங்களை வாயை மூடவைத்தல்" இனப் படுகொலைக்கு எதிராக ஒன்றிணைந்து, நவம்பர் 06, 2013 எட்டக் டிய இடம்: http://www.tamilsagainstgenocide.org/Data/Docs/silencing-the -press-Nov.06.2013pdf.

15.பிரித்தானிய பிரதமரின் வரலாற்று ரீதியான யாழ்ப்பாண வருகை தமிழர்களின் நம்பிக்கைகளை அதிகரித்து விட்டிருக்கிறது. தமிழ் காடியன் நவம்பர் 16,2013 எட்டக்கூடிய இடம் http://www.tamilguardian.com/content/british -premiers -historic-jaffna-visit-raises-tamil-hopes?articleid=9227.

16. "தமிழ் ஊடகவியலாளர்களின் மீண்டெழுதலை தூதுவர் பாராட்டுகிறார்." தமிழ் காடியன் நவம்பர் 21, 2015 எட்டக்கூடிய இடம் http://www.tamilguardian.com/content/us -ambassador- praises-resilience-tamil-joumalists.

வட-கிழக்கில் இருக்கும் பலருக்கு நினைவு கூரலின் தவிர்க்க முடியாத தன்மையானது பொறுப்புக் கூறல் தொடர்பாக அவர்கள் கொண்டிருக்கும் அக்கறையோடு பிணைக்கப்பட்டதாக இருக்கிறது. மீண்டும் மீண்டுமாக அவர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவத்தினர் நிகழ்த்திய அட்டூழியங்களை சிறிலங்கா அரசு ஏற்றுக் கொள்ள வேண்டியதற்கான தேவையை அழுத்திக் கூறினார்கள். இக் கொடூரங்களுக்குப் பொறுப்பானவர் மீது குற்றவியல் விசாரணை நடத்தி தண்டிக்கப்படுதல் மற்றும் எந்த ஒரு நீதிச் செய்முறையிலும் சர்வதேச ஈடுபடுதலுக்கான தேவை பற்றியதுமான தங்கள் எதிர்பாப்புகள் குறித்தும் பல நேர்காணப் பட்டவர்கள் கலந்துரையாடினார்கள்.

அனேகரைப் பொறுத்த வரையிலே தங்களால் நேசிக்கப்பட்டவர்களின் தலைவிதி தொடர்பான தகவல்களைத் தேடும் முயற்சியில் ஈடுபடுவதென்பது, ஆகக் குறைந்தது அட்டூழியங்களை நிகழ்த்தியவர்களின் தண்டனை விலக்கை முடிவுக்கு கொண்டு வருவதற்குள்ள முக்கியத்துவத்தை ஒத்த முக்கியத்துவத்தைக் கொண்டதாக இருக்கிறது. உண்மை மற்றும் மனித உரிமை துஷ்பிரயோகங்களை ஏற்றுக்கொள்ளுதல் தொடர்பான அக்கறைகள், விசேடமாகக் காணாமற் போய்விட்டவர்களின் குடும்பங்களில் கூர்மையாகக் காணப்படுகிறது. ஒரு நேர்காணப்பட்டவர் கூறியது போல் "இழப்பீடு செய்வதற்கு முன்னதாக எங்களுக்கு உண்மை வெளியாக வேண்டும்" (முல்லைத்தீவு). புதிதாக உருவாக்கப் பட்டிருக்கும் காணாமல் போனோருக்கான அலுவலகம் முடிவுகளைத் தருவதற்கான வாக்குறுதியை நிறைவேற்றும் என்பது தொடர்பாக அவர்கள் ஒரு மனதான சந்தேகத்தை எழுப்பினார்கள். காணாமல் போனவஉகளின் தலைவிதிகள் வெளிப்படுத்தப்படும் என்பதில் நம்பிக்கை இல்லாத நிலையிலே, வட-கிழக்கெங்கும் உள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காணாமல் போனவர் குறித்து துக்கம் கொண்டாட முடியாத இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**"காணாமல் போனோரை எப்படி நினைவிற் பதிப்பது?"** *(கிளிநொச்சி)*




காணாமல் போனோரின் குடும்பங்களால் கிளிநொச்சியில் எதிர்ப்பு ஆர்பாட்டம் (தமிழ்காடியன், ஓகஸ்ற் 2016)

## மரணித்த போராளிகளை நினைவு கூருதல்

**"போரில் வீரமரணம் அடைந்த தங்கள் உறுப்பினர்களுக்கு டுவுவுநு அஞ்சலி செலுத்திய அதே விதத்தில், போர் நாயகர்களை நாங்களும் கௌரவிக்க விரும்புகிறோம்"** *(யாழ்ப்பாணம்)*

கிட்டத்தட்ட அனைத்து நேர்காணலிலும் எம்முடன் பேசியவர்கள்' LTTE யின் போராளிகளை நினைவு கூர்வதற்குள்ள தேவையை வலியுறுத்தினார்கள். அவர்களில் பலரும் டுவுவுநு யினால் ஒழுங்கு செய்யப்படும நினைவு கூரல் நிகழ்வான "மாவீரர் நாள்" பற்றி உள்ளார்வத்தோடு குறிப்பிட்டார்கள். LTTEயின் முதலாவது உறுப்பினர் மரணித்த நினைவு தினத்தை வருடாந்தம் குறிக்கும் மாவீரர் நாளானது 1989 இல் இருந்து 2008 வரை வருடாந்தம் வட-கிழக்கில் அனுஸ்டிக்கப்பட்டது. மரணித்த போராளிகளின் கல்லறைகளுக்கு வருகை தருவதற்கும், அவர்களுடைய ஈகங்களைக் கௌரவிப்பதற்குமான வாய்ப்பை மரணித்த போராளிகளின் குடும்பங்களுக்கு அது பெற்றுக் கொடுத்தது. மரணித்து விட்ட போராளிகளின் குடும்பத்தினர், உண்ணா நோன்பாற்றிய லெப். கேணல் திலீபன் (செப்டெம்பர் 26) மற்றும் அன்னை பூபதியின் வருடாந்த நினைவு தினங்களை (ஏப்ரல் 19ம் திகதி)[17], முதலாவது கரும்புலியான கப்டன் மில்லரின்[18] வீரச்சாவைக் குறிக்கும் யூலை 5ம் திகதி, LTTE இன் முதல் பெண் போராளியான 2ம் லெப்.மாலதியை நினைவு கூரும் மகளிர் எழுச்சி நாளான ஒக்.10[19] முதலியவை உள்ளிட்டதாக, நினைவு கூரப்பட வேண்டும் என, தாங்கள் நினைக்கும் வேறு பல முக்கிய திகதிகளையும் அழுத்திக் கூறினார்கள். சண்டையின் போது மரணித்த தங்கள் சொந்த உறவுகளின் நினைவு தினங்களை, அவர்களது புகைப்படங்களைப் பொது இடங்களில் வைத்து அவர்களைக் கௌரவிக்கும் முகமாக மெழுகு திரிகளை ஏற்றி அவர்களை நினைவு கூருவதற்கு தங்களுக்குள்ள விருப்பம் பற்றியும் நேர்காணப்பட்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

17. "20 நூற்றாண்டின் நூறு தமிழர்கள், நாட்டுப் பற்றாளர் அன்னை பூபதி" தமிழ் நேஷன் ஒக். யூன் 13,2007 எட்டக்கூடிய இடம்: http://tamilnation.co/hundredtamils/annai poopathy .htm.

18. தமிழர்கள் கரும்புலிகள் நாளை கொண்டாடுகிறார்கள்"தமிழ் நெற். யூலை 06, 1997 எட்டக்கூடிய இடம்: https://www.tamilnet.com/art.html?catid=13&artid =26

19. "பெண் எழுச்சி நாள் வட-கிழக்கில் கொண்டாடப்பட்டது" தமிழ் நெற் ஒக். 11, 2003 எட்டக்கூடிய இடம்: https://www.tamilnet.com/art.html?catid=13&artid=10090.

## மாவீரர் நாள்

தமிழ் தேசிய நாள்காட்டியிலே மிக முக்கியமான நாளாக மாவீரர் நாள் இருக்கிறது. 1989 ஆண்டு தொடக்கம் முதலாவதாக மரணித்த போராளியான லெப். சங்கரின் வருடாந்த நினைவு தினத்தைக் குறிக்கும் நவம்பர் 27ம் திகதியன்று LTTEயினர் மாவீரர் நாளைக் கொண்டாடி வருகிறார்கள். சிறிலங்கா அரசினால் அது தவறான விதத்திலே LTTE தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினத்தோடு (நவம்பர் 26) கலந்திணைத்துக் கூறப்பட்டாலும் மாவீரர் நாள் என்பது உண்மையில் அந்த இயக்கத்தினுடைய வீழ்ந்து விட்ட உறுப்பினர்களை நினைவு கூரும் உத்தியோகபூர்வமான நாளாகும். ஒவ்வொரு வருடமும் இந்த நாளின் போது பிரபாகரன் ஒரு பகிரங்க பேச்சை நிகழ்த்துவார். வரவிருக்கும் ஆண்டுக்கான LTTE யின் உத்தியோகபூர்வ கொள்கைப் பிரகடனமாக இந்த உரை பரவலாக நோக்கப்பட்டது.

1990களில் தொடங்கி LTTE யானது அதனது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மாவீரர் துயிலுமில்லம் என அழைக்கப்பட்ட பிரமாண்டமான நினைவாலயங்களை அமைக்கத் தொடங்கியது. தமிழ் இந்துக்கள் மரபு வழியாக தங்கள் இறந்தவர்களை தகனம் செய்வார்களெனினும் LTTE யினால் அறிமுகப் படுத்தப்பட்ட புதைக்கும் வழக்கமானது, போர்வீரர்களை கௌரவப்படுத்துவதற்கென அவர்களின் கல்லறைகளிலே ஒரு விசேட கல்லை (நடுகல்) நாட்டும் புராதன மரபுக்குத் திரும்புவதாக அமைந்தது. மரணித்த போராளிகளின் சிலைகளை நிறுவுதல் மற்றும் அவர்களது ஈகத்தை சம்பிரதாய பூர்வமாகப் போற்றும் விதத்தில் வருடம் முழுவதும் பல்வேறு வகையில் நினைவு கூரல்களை மேற்கொள்ளுதல் ஊடான பெரிய அளவு நிகழ்ச்சி திட்டங்களின் ஒரு பகுதியாக இது இருந்தது.

மாவீரர் நாளன்று மரணித்தவர்களின் உறவுகள் தங்களால் நேசிக்கப்பட்டவர்களின் கல்லறைகள் மீது மலர்களையும் வேறு படையல்களையும் வைப்பதற்கென அந்த இடங்களுக்கு வருகை தருவார்கள். லெப். சங்கரின் மரணம் நிகழ்ந்த நேரமான 18.07 மணிக்கு ஒரு புனிதமான ஈகச்சுடர் ஏற்றப்படும் போது துயிலுமில்லப் பாடலும் இசைக்கப்படும். அதைத் தொடர்ந்து ஒவ்வொரு கல்லறையிலும் நடுகற்களிலும் ஈகைச்சுடர்கள் மற்றும் மெழுகுதிரிகள் ஏற்றப்படும். ஆண்டுகள் செல்ல இந்நாளையொட்டிய மறு நிகழ்வுகள் மதச் சடங்குகள், பகிரங்க ஊர்வலங்கள் மற்றும் கலாச்சார ஆற்றுகைகள் உள்ளிட்டதாக விரிவு பெற்றன.

மாவீரர் நாள் அனுசரிப்பானது இலங்கைத் தீவுக்கு அப்பாலும் பரவியதோடு உலகெங்குமள்ள நூறாயிரக் கணக்கான புலம் பெயர்ந்த தமிழர்கள் அந்த நாளை அனுஸ்டிக்கிறார்கள். இலண்டன், ரொறண்ரோ, பாரிஸ், நியுயோர்க் மற்றும் ஏனைய புலம் பெயர்ந்தோர் வாழும் இடங்களிலும் புலம் பெயர்ந்தோர் சமூக உறுப்பினர்கள் சிறிலங்காவில் இடம் பெறும் நிகழ்வோடு சமகாலத்தில் நினைவு கூரல்களை நடத்தி சரியாக சிறிலங்கா நேரம் 18:07க்கு ஈகைச் சுடர்களை ஏற்றி வீழ்ந்து விட்ட வீரர்களின் புகைப்படங்களுக்கு முன்னால் மலர்களை வைத்து அஞ்சலி செய்தார்கள்.

2009 இல் LTTE தோற்கடிக்கப்பட்டு மாவீரர் துயிலுமில்லங்கள் அழிக்கப் பட்டதை தொடர்ந்து மாவீரர் நாள் நினைவு கூரல்கள் வட-கிழக்கில் தடைசெய்யப்படடுள்ளன. (இந்த தடை தொடர்பான ஆய்வு ஒன்றை பகுதி iii இல் பார்க்கவும்) எவ்வாறெனினும் இந்த நாளானது மரணித்து விட்ட உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. வட-கிழக்கிலுள்ள தமிழர்கள் தங்கள் இயலுமைக்குட்பட்டதாக இந்த நினைவு கூரல்களை தொடர்ந்து அனுசரித்து வருவதோடு உலகெங்கும் இருக்கும் புலம் பெயர்ந்த தமிழர்களிடையே பெருமெடுப்பிலான சம்பிரதாய அனுசரிப்புகள் தொடர்கின்றன.

முன்னாள் போராளிகள் மற்றும் மாவீரர்களின் உறவினர்களைப் பொறுத்தவரை தாங்கள் இழந்து விட்ட தோழர்கள் மற்றும் தங்களால் நேசிக்கப்பட்டவர்களையும் கௌரவிப்பது என்பது அவர்கள் விரும்பிச் செய்யும் கடமையாகவே இருக்கிறது. ஒரு நேர்காணப்பட்டவர் கூறியது போல் "LTTE யில் இணைந்து மரணித்துப் போனவர்கள் எங்களின் பிள்ளைகளும் உறவுகளும் தான். அந்தப் போராட்டம் நியாயமானது. அதற்காக உயிரை அர்ப்பணித்தவர்களை 2009க்கு முன்பு நாங்கள் செய்தது போல் நினைவு கூரவேண்டிய தேவை எமக்கு இருக்கிறது".



மாவீரர் நாளன்று வடமாகாணத்தில் உள்ள ஒரு துயிலுமில்லம் கோப்பு படம்

## கூட்டாக நினைவு கூருதலும் வரலாற்று நினைவும்

நேர்காணப்பட்டவர்களில் பலரும் (பொதுமக்கள் மற்றும் போராளிகள் இருதரப்பினரிலும்) மரணித்தவர்களை நினைவு கூருதலில் உள்ள ஒரு முக்கிய கூறாக சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களோடு சேர்ந்து கொள்வது இருக்கிறது என்பதை அழுத்திக் கூறினார்கள். உறவினர்களை சண்டையில் இழந்து விட்டவர்களைப் பொறுத்த வரை அவர்களை மிகவும் ஏங்க வைப்பது ஏனைய வீழ்ந்து விட்டவர்களின் குடும்பங்களோடு இணைந்து (இப்போது அழிக்கப்பட்டு விட்ட) மாவீரர் துயிலுமில்லங்களுக்கு போக முடியாமல் இருப்பதாகும். ஒரு நேர்காணப்பட்டவர் புலம்பியது போல், "ஒன்று சேரவும் நினைவு கூரவும் துயிலுமில்லம் போன்ற ஒரு நினைவிடம் எங்களுக்கு வேண்டும் (கிளிநொச்சி)" அமைதியாகவும் தனிமையாகவும் வீடுகளில் ஈகைச்சுடரை ஏற்றுவதென்பது போர்க்காலங்களில் நிகழ்த்தப்பட்டதும் தங்கள் நினைவுகளில் பதிந்திருப்பதுமான பகிரங்க நிகழ்வுகளுக்கான தரம் குறைந்த மாற்றீடாகவே இருக்கும் என்று அவர்கள் உணர்கிறார்கள்.

தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களின் கனசெறிவான இயல்பானது சமூகரீதியான நினைவு கூரலை வேண்டி நிற்கிறது எனப் பல நேர்காணப்பட்டோர் குறிப்பிட்டார்கள். அவர்களில் ஒருவரது வார்த்தைகளில் "தமிழர்கள் ஒரு கூட்டு இனம். அவர்கள் கூட்டாக தண்டிக்கப் பட்டார்கள் "அவர்கள் இப்போது ஒன்றிணைய விரும்புகிறார்கள." (வவுனியா). குறிப்பாகப் போரின் முடிவின் போது பொதுமக்கள் மீது அரச படையினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட படுநாசகரமான வன்முறையினை நோக்கில் கொண்டு "முள்ளிவாய்க்கால் ஒரு புனித பூமி. தப்பியிருப்பவர்கள் அங்கே சுதந்திரமாக ஒன்று திரள்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும." என்பதில் நேர்காணப்பட்டவர்கள் உறுதியாக நின்றார்கள் (யாழ்ப்பாணம்).

**"முள்ளிவாய்க்கால் போன்ற அமைவிடங்கள் பேணப்படவேண்டும் என்பதோடு அவற்றை நினைவு கூரும் இடங்களாகப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்பட வேண்டும்"** *(கிளிநொச்சி).*

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற ஆயிரக்கணக்கான மரணங்களை நினைவு கூருவதற்கான ஒரு அமைவிடமாக முள்ளிவாய்க்காலைப் பேணுவதன் முக்கியத்துவம் பற்றி அழுத்தமாகக் கூறினார்கள். மே 2009 ஆண்டுக்குப் பின்பு வெற்றிக் களிப்பிலிருந்த அரசானது நாட்டின் தென்பகுதியிலிருந்து வரும் உல்லாசப் பயணிகளை கவர்ந்து இழுக்கும் இடமாக அதனை மாற்றியிருந்தது என்ற விடயத்தையும் பலவேறு நேர்காணப்பட்டவர்களும் எழுப்பியிருந்தார்கள். இந்தப் "போர் உல்லாசப் பயணிகளின்" இரசனைக்கு தீனி போடுவதற்கென நிர்மாணிக்கப்பட்ட சில கட்டமைப்புகள் குலைக்கப்பட்டு, உல்லாசப் பயணிகளின் வருகையும் குறைந்து விட்டிருந்தாலும், பாதிக்கப்பட்ட சமூகத்திலிருக்கும் பலர் தங்கள் மரணித்தவர்களை நினைவு கூருவதை சாத்தியமற்றதாகக் கூடிய ஒன்றாக அரசு இந்த இடத்தை மாற்றி விடக்கூடும் என்று கவலைப் பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். நேர்காணப்படடவர்கள் முனைப்புப்படுத்திக் காட்டிய இன்னொரு குறிப்பான கவலையாக, நந்திக்கடல் நீரேரியில் அமைக்கப்பட்டிருப்பதற்கு மேலதிகமாக, இன்னொரு படைத்துறை உல்லாச விடுதியை இந்தப் பகுதியில் கட்டக்கூடும் என்ற எதிர்பாராப்பாகும். நினைவு கூருதலுக்கு அது ஏற்படுத்தக்கூடிய தடையை விட எத்தனையோ பேர் தமது உயிரை இழந்த அவ்விடத்தைப் பொருத்தமற்ற விதத்திலும் வலிந்து தாக்கும் விதத்திலும் பயன்படுத்துவதாக இருக்கும் என்று உணர்கிறார்கள். படைத்துறையினரால் குண்டு வீசித் தாக்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற அதிகளவு தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்ட வேறு அமைவிடங்களையும் பேணுவதற்கான விருப்பத்தையும் நேர்காணப்பட்டவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த இடங்களை பேணுவது தொடர்பாக ஆதரித்து வாதிடுவதற்கான காரணமாக மேற்படி நிகழ்வுகளின் நினைவுகளை உயிர் துடிப்போடு வைத்திருப்பது அமைகிறது. இதே வகையிலே பல நேர்காணப்பட்டவர்களும் தாங்கள் வருகை தருவதற்கும் மற்றவர்களுக்கு விசேடமாக இளம் தலைமுறையினருக்கும் இந்த முரண்பாட்டைப் பற்றிய அறிவை பெற்றுத் தருவதிலும், அருங்காட்சியகங்கள் மற்றும் ஏனைய நினைவகங்கள் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றிக் கதைத்தார்கள். பலரையும் பொறுத்தவரை சமூகத்தினுடைய பிள்ளைகளுக்கு அறிவூட்டப்பட வேண்டிய தேவை பற்றிய அக்கறைகள் பெருமளவில் காணப்பட்டன. விடுதலைப் போராட்டமும் இழக்கப்பட்ட உயிர்களும் மறக்கப்பட்டு போய் விடலாம் என்ற பயத்தை இவர்களில் சிலர் கொண்டிருந்தார்கள்.

> **"எமது போராட்டத்தைப் பதிவு செய்ய அருங்காட்சியகம் அவசியமாகும் ...இது தமிழ் மக்களுக்கானதாக இருக்கும் அதே வேளை என்ன நடந்தது என்பதை சிங்கள மக்களுக்கு உணர்த்தக் கூடியதாகவும் அது இருக்க வேண்டும்".** *(யாழ்ப்பாணம்)*

## III. நினைவுகூரலுக்கான தடைகள்

முந்திய பகுதியில் விரிவாகக் குறிப்பிட்டது போல் பாதிக்கப்பட்ட சமூகத்தின் உறுப்பினர்கள் நினைவுகூரலை விரும்புகிறார்கள் என்பதற்கும், நிகழ்காலத்தில் அவர்களால் எப்படி நினைவு கூரக்கூடியதாக இருக்கிறது என்பதற்குமிடயிலான வேறுபாட்டு முனைப்பு வலிமையானதாகும். ஒருநேர்காணப்பட்டவர்கள் எல்லோருமே சட்ட ரீதியான கட்டுப்பாடுகள் மற்றும் அரச படைகளின் தொல்லைப்படுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்களினால் நினைவுகூருவதிலிருந்து தாம் எவ்வாறு தடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது குறித்த விபரங்களைக் கூறினார்கள். போரின் முடிவைத் தொடர்ந்து வந்த வருடங்களிலே மே 18 நினைவுகூரல்கள் நிகழ்வுகள் வலிந்தொடுக்கப்பட்டமை மற்றும் மரணித்துவிட்ட LTTE போராளிகளை நினைவுகூருவதற்கான தடை தொடர்வதையும் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். நேர்காணப்பட்டவர்களில் பலருக்குத் துயிலுமில்லம் மற்றும் ஏனைய நினைவுச்சின்னங்கள், சிலைகள் மற்றும் LTTE யுடன் தொடர்புபட்ட அமைவிடங்கள் முதலியவற்றின் அழிப்பானது குறிப்பாகவே துன்பம் தருகின்ற காயமாக இருக்கிறது. அத்துடன் கிட்டத்தட்ட நேர்காணப்பட்ட ஒவ்வொருவரும் முந்தைய சண்டை வலயங்கள் எங்கும் வெற்றி நினைவுச் சின்னங்கள் நிர்மாணிக்கப்பட்டிருப்பது ஏற்படுத்தியிருக்கும் மன வடுக்கள் பற்றி வலியுறுத்திச் சொன்னார்கள். இந்த அனைத்து இயங்கியலுக்கும் கீழே வட-கிழக்கில் தொடர்ந்து கொண்டிருக்கின்ற வக்கிரமான படைத்துறைப் பிரசன்னம் இருக்கின்றதுடன், பாதிக்கப்பட்ட சமூகமானது அரசபடையினரால் அனுபவிக்கப்பட்ட வன்செயல்களை சுதந்திரமாக நினைவுகூர முடியாமல் தடுத்துக் கொண்டிருக்கின்ற அதேவேளை, அவற்றை மறந்து போக முடியாமலும் செய்து கொண்டிருக்கின்றன.

## போரின் முடிவைத்தொடர்ந்து ஒடுக்கப்படும் முள்ளிவாய்க்கால் பற்றிய நினைவுகூரல்

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற பரவலான படுகொலைகள் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்டதன் பின் வந்த ஏழு வருடங்களிலே, நினைவுகூரல் நடவடிக்கைகள் அரசினால் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டன. ராஜபக்ஷ அரசானது ஆட்சியில் இருந்த அதேவேளை ஒடுக்குதல் வெளிப்படையானதாக இருந்ததோடு பகிரங்கமாக நினைவுகூரலை மேற்கொண்டவர்கள் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்படுதல் மற்றும் தொல்லைப்படுத்தப்படல் முதலிய அபாயங்களை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. (விபரங்களுக்கு கீழே உள்ள கால அடிப்படையான பட்டியலைப் பார்க்கவும்) இந்த வருடங்களிலே தங்கள் வீடுகளில் மெழுகுவர்த்திகள் ஒளியை மறைக்க ஜன்னல் திரைகளை இழுத்துவிட்ட பின் இரகசியமாக முள்ளிவாய்க்காலை நினைவு கூர்ந்ததை அவர்கள் விவரித்தார்கள்.

நிகழ்கால அரசு பதவிக்கு வந்த பின் மட்டுப்படுத்தல் தளர்த்தப் பட்டிருந்தாலும் பகிரங்க ஊர்வலங்கள் தடைசெய்யப்பட்டதோடு 2016இன் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளின் போது அதிகமான படைத்துறை பிரசன்னமும் கண்காணிப்பும் தொடர்ந்தன. வட-கிழக்கில் இடம்பெறுகின்ற எந்த ஒரு பகிரங்க எதிர்ப்பு ஆர்பாட்டங்கள் ஒன்றுகூடுதல்களில் நிகழ்வது போலவே 2016 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பங்கு கொண்டவர்கள், தாங்கள் புலனாய்வாளர்களாலும் இராணுவத்தினராலும் புகைப்படம் எடுக்கப்படுவதையும் வீடியோ எடுக்கப்படுவதையும் கண்டு கொண்ட அதே வேளை ஒழுங்கமைப்பாளர்கள் பாதுகாப்பு படையினரால் தொல்லைப் படுத்தப்பட்டு பயமுறுத்தவும் பட்டார்கள். இதன் விளைவாகப் பாதிக்கப்பட்ட சமூகத்தில் இருக்கும் பலர் இன்னமும் பகிரங்கமாக நினைவு கூர பயப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மே 18 நிகழ்வுகளில் பங்கு கொள்ளுதலானது CID இனர் தேடி வருவதற்கும் வழிவகுக்கும் என்ற பயத்தை பல நேர்காணப் பட்டவர்கள் குறிப்பிட்டார்கள். வேறு சிலரோ இந்த ஆட்சி மாற்றம் தற்காலிகமானதெனவும் இப்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்காக பின்னர் எப்போதாவது தண்டிக்கப் படக்கூடும் என்று வலியுறுத்தினார்கள். வரலாறு தன்னைத் தானே மீள நிகழ்த்திக் கொள்ளும் என்ற கூற்று சார்ந்து எழுகின்ற பயமாக இது இருக்கிறது. கடந்த போர் நிறுத்தத்தின் போது (2002 – 2008) தமிழ் அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மனித உரிமை விவகாரங்களை பகிரங்கமாக எழுப்பவும் அரசியல் உரிமைகளுக்கு ஆதரவாக வாதிடுவதற்கும் ஒப்பீட்டளவில் பாதுகாப்பு இருப்பதாக உணர்ந்தார்கள். எவ்வாறாயினும் யுத்த நிறுத்தம் முறிந்த போது இவ்வாறான நூற்றுக்கணக்கான தமிழர்கள் பாதுகாப்பு படையினரால் இலக்கு வைத்து கொல்லப்பட்டார்கள். இன்று காணப்படும் அரசியல் வெளியினை நேர்காணப்பட்டவர்களில் பலரும் ஒரு ஏளன மனப்பான்மையுடன் நோக்குவதற்கு இது வழிவகுத்திருக்கிறது. ஒரு நேர்காணப்பட்டவர் விளக்கியதைப் போல் "இந்த சூழல் சீர்குலைந்து போய் விடுமென்று மக்கள் அஞ்சுகிறார்கள். அவர்கள் இப்போது செய்யும் எதுவும் அவர்களை ஆட்டிப் படைக்கவெனத் திரும்பி வரக்கூடும்." (திருகோணமலை).




யாழ் பல்கலைகழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் (மே 2016, தமிழ் காடியன்)

## அட்டவணை 2

ராஜபக்ஷ அரசின் கீழ் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வலிந்தொடுக்கப் பட்டமையின் காலப் பதிவு

| | |
|---|---|
| 2010 | **பாதிக்கப்பட்ட சமூகத்தினரால் மட்டுப்படுத்தப்பட்ட நினைவேந்தல் முயற்சிகள் வட-கிழக்கு முழுவதும். படைத்துறை பிரசன்னம் அதிகரித்ததும் நினைவேந்தல்கள் திட்டமிடுவோருக்கு பயமுறுத்தலும்.<br>யாழ் நிகழ்வுகள் படைத்துறையினரால் தடைசெய்யப்பட்டமை.<br>ஊடகவியலாளர்கள் தடுத்து வைக்கப்பட்டமை** (20) |
| 2011 | **வட-கிழக்கில் இரகசிய நினைவேந்தல்கள்**(21)<br>**த. கூட்டமைப்பு அரசியல் வாதிகள் மற்றும் மத தலைவர்கள் பங்குபற்றிய நிகழ்வில் பங்குபற்றியோர் தொல்லைப்படுத்தப் பட்டமை**(22) |
| 2012 | **பகிரங்கநினைவு கூருவதற்கான முயற்சிகள் அதிகரிப்பு.**(23)<br>**நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு பயணித்துக் கொண்டிருந்த மாணவர் தலைவர் தாக்கப்பட்டமை.** |
| 2013 | **TNA, TNPF மற்றும் யாழ் பல்கலைக் கழகத்தினால் உத்தியோக பூர்வ நினைவேந்தல் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டமை.**(24) |
| 2014 | **வட-கிழக்கு எங்கும் 5வது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள்.<br>பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஊடகவியலாளருக்கும் உயிர் அச்சுறுத்தல் விடுத்தமை.**(25)<br>**முதன்முதலாக முள்ளிவாய்காலில் நிகழ்த்தப்பட்ட நிகழ்வில் பங்கு கொண்டோரை படைத்துறையினர் படமெடுத்தமை.**(26)<br>**வடமாகாண சபையின் தலைமையக நிகழ்வை பொலிஸ் குழப்பியமை.**(27) |

---

20. யாழ்ப்பாணத்து மே நினைவேந்தலை சிறிலங்கா இராணுவம் தடுத்தது ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப் பட்டனர். தமிழ் நெற் மே 17, 2010 எட்டக்கூடிய இடம்: https://www.tamilnet.com/art.html?catid=13&artid =317773

21. "தமிழ் ஈழம் என்ற நாடு. முள்ளிவாய்க்கால் ஓசையில்லாமல் அழுகிறது."தமிழ் நெற் மே 19, 2011 எட்டக்கூடிய இடம் : https://www.tamilnet.com/art.html?catid=13&artid =33967

22. யாழ்ப்பாண நினைவேந்தல் நிகழ்வில் சிறிலங்கா படைத்துறையினர் துக்கம் கொண்டாடியோரை தொல்லைப் படுத்தியது." தமழ் நெற் மே 19. 2011 எட்டக்கூடிய இடம்: https://www.tamilnet.com/art.html?catid=13&artid =33971

23. மேலே கூறப்பட்டது போல்

24. மே 18 நினைவேந்தலுக்காக TNPF உறுப்பினர்கள்" தமிழ் நெற் 17 2013 எட்டக்கூடிய இடம்: http://www.tamilguardian.com/content/tnpf- members -arrested-may-18th - remembrance?articleid=7847.

25. மே 18 நினைவேந்தல் தொடர்பாக ஊடகவியலாளர்கள் யாழ் பல்கலைக்ழக விரிவுரையாளர்கள் மாணவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது." தமிழ் காடியன் மே 19, 2004 எட்டக்கூடிய இடம். : http://www.tamilguardian.com/content/ death –threats –issued- joumalists-and Jaffna-uni-staff-students-over-18-rememberance.

26. இராணுவத் தொல்லைகளுக்கு மத்தியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டது" தமிழ்காடியன் மே 17, 2014 எட்டக்கூடிய இடம்.: http://www.tamilguardian.com/content/ remembrance-event-held - mullivaikal-amidst-military-harassment?aiticleid= 10937

27. வடமாகாண அலுவலக முள்ளி வாய்க்கால் நினைவு கூரல் நிகழ்வை பொலிசார் இடையூறு செய்தார்கள்" தமிழ் காடியன் மே 15, 2014 எட்டக்கூடிய இடம்: http://www.tamilguardian.com/content/police -disrupts - mullivaikal -memorial –event –npc-office?articled=10921

## LTTE ஐ நினைவு கூருதல் மீதான தடை

மரணித்த பொதுமக்களை நினைவு கூருதல் தொடர்பான தடைகள் கடந்த இரண்டு வருடங்களில் நெகிழ்த்தப் பட்டிருந்தாலும், LTTE யினரை நினைவு கூருவுதற்கான தடை அப்படியே இறுக்கமாக நிலைத்திருக்கிறது. மாவீரர் நாள் மற்றும் டுவுவுநு நாட்களை அனுஸ்டிப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. ராஜபக்ச ஆட்சிக் காலத்திலே இத் தடையுடன் இணைந்ததாக மாவீரர் நாளில் ஆலய மணிகளை ஒலிப்பதும் மெழுகுதிரி ஏற்றுவதும் தடை செய்யப்பட்டிருந்தன. உதாரணமாக 2012ம் ஆண்டில் மாவீரர் நாளும், தமிழ்ர் இந்து திருநாளான கார்த்திகை விளக்கீட்டுக்கு ஒளியேற்றும் நாளும் ஒரே திகதியில் வந்திருந்ததால், படைத்துறையானது தனியார் நிறுவனம் ஒன்றில் கார்த்திகை விளக்கீட்டுக்கு ஏற்றப்பட்டிருந்த விளக்குகளை பலவந்தமாக அணைத்தது. புதிய அரசின் கீழும் நினைவு கூரல் நிகழ்வுகளை தடைசெய்யும் விதத்திலே மாவீரர் நாளுக்கு முந்திய தினங்களிலே, முன்னர் மாவீரர் துயிலுமில்லங்கள் அமைந்திருந்த இடங்களிலே இப்போதும் இராணுவப் பிரசன்னம் அதிகரிக்கப்படுகிறது. தாங்கள் மாவீரர் நாளை பகிரங்கமாக நினைவு கூர விரும்பினாலும் அப்படிச் செய்வதற்கு மிகவும் பயமாக இருப்பதாகவும் நேர்காணப்பட்டவர்களில் பலரும் உறுதிபடத் தெரிவித்தனர்.

### **"இப்போது நாங்கள் வீட்டிலேயே இருந்து அழுகிறோம்"** *(கிளிநொச்சி).*

2009ம் ஆண்டுக்கு முன் வீரச்சாவடைந்த போராளிகளை நினைவு கூரும் விதத்துக்கும், தற்போது தனியாகவும் இரகசியமாகவும் நினைவு கூரும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதற்கும் இடையேயான வேறுபாட்டை நேர்கண்டவர்கள் வலியுறுத்தி தெரிவித்தார்கள். மரணித்துப் போய்விட்ட LTTE இனரை தங்கள் சொந்த வீடுகளிலேயே எப்படி நினைவு கூருகிறோம் என்பதில் தாங்கள் எவ்வளவு மனக்குழப்பத்துடன் ஈடுபடுகிறார்கள் என்று பலரும் சொன்னார்கள். CID யினரின் கவனத்தைத் தவிஉக்கும் விதத்திலே, வீரச்சாவடைந்த மகன்கள் மகள்மாரின் புகைப்படங்களை தாங்கள் புதைத்து அல்லது அழித்து விட்டதாக பலர் கூறினார்கள். டுவுவுநு சீருடைகளை போட்டோ சொப் மூலம் சாதாரண உடைக்கு மாற்றியதை வேறு சிலர் விவரித்தார்கள். ஆனால் ஒரு பேட்டி காணப்பட்டவர் விளக்கியது போல் "எங்களை இராணுவத்தினர் தேடி வரக்கூடும் என எண்ணினால் இப்போதும் அவற்றை மறைக்கிறோம்" (கிளிநொச்சி). இறந்து போன ஒரு இளம் நபருடைய புகைப்படமானது தன்னியக்கமாகவே அவர் ஒரு போராளி என்ற சந்தேகத்தைக் கிளப்பி விடும். LTTE குடும்பங்களுடன் பழகினால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் பற்றி அஞ்சி நடுங்குகின்ற சமூகத்தின் வேறு உறுப்பினர்களிடமிருந்து தொல்லைகளை எதிர் கொள்வதாக சில நேர்காணப்பட்டவர்கள் கூறினார்கள். "படங்களை வைத்திருந்தால் நாங்கள் பழிக்குரியவர்களாகக் கருதப்படுவோம் என்பதால் வீட்டில் படங்களை வைத்திருப்பதில்லை" (திருகோணமலை).

### **"விடுதலைப்புலிகளை மட்டும்தான் நினைவு கொள்ளமுடியாது."** *(கிளிநொச்சி)*

மரணித்து விட்ட போராளிகளின் குடும்பங்களில் பலவற்றுக்கு தங்கள் அன்புக்குரியவர்களை நினைவு கூர முடியாமல் இருப்பதானது, இத்தடையின் நியாயமற்ற தன்மை என்று அவர்கள் உணர்கின்றபடியால் மேலும் மோசமாக்கப்பட்டிருக்கிறது. அரசுக்கெதிராக இரண்டு ஆயுதம் தாங்கிய போராட்டங்களை நடத்திய சிங்கள இடதுசாரி இயக்கமான JVP உட்பட வேறு தீவிரவாத இயக்கங்களுக்கு நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1970 களிலும் ஒரு பயங்கரவாத இயக்கம் என தடைசெய்யப்பட்டிருந்த JVP ஆனது ஒவ்வொரு வருடமும் இரண்டு வருடாந்த தினங்களை அனுசரிக்கிறது. தனது வீழ்ந்து விட்ட போராளிகளை ஏப்ரல் 5ம் திகதியும் அரசினால் கொல்லப்பட்ட அதனது தலைவரான றோஹண விஜயவீர நினைவாக நொவம்பர் 13ம் திகதியையும் அது அனுசரிக்கிறது. தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு (PLOTE) மற்றும் தமிழ் ஈழவிடுதலை இயக்கம் (TELO) போன்ற ஏனைய தமிழ் போராளிக் குழுக்களுக்கு இறந்து விட்ட தங்கள் உறுப்பினர்களை நினைவு கூர சிறிலங்கா அரசினால் அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது.[28]

## துயிலுமில்லங்கள் மற்றும் முக்கிய இடங்களின் அழிப்பு

**"எங்கள் நினைவு சின்னங்களை எல்லாம் அழித்து விட்டார்கள். அவை மீள கட்டியெழுப்பப் படவேண்டும்." (கிளிநொச்சி)**

நினைவு கூருதலுக்கு முக்கிய தடையாக இருக்கும் விதத்திலே, டுவுவுநு நினைவு சின்னங்களையும் நினைவு மண்டபங்களையும் அரசு அழித்து விட்டதை நேர்காணப்பட்ட எல்லோருமே தவறாமல் கண்டனம் செய்தார்கள். அடிக்கடி அவர்களால் குறிப்பிடப்பட்ட அமைவிடங்களாக துயிலுமில்லங்கள் இருந்தன. ஒரு காலத்திலே வட-கிழக்கு முழுவதும் 27 துயிலுமில்லங்கள் பரவியிருந்தன. (அவற்றின் அமைவிடங்களின் பட்டியலுக்கு கீழே உள்ள அட்டவணை 2ஐப் பார்க்கவும்.) நிலக் கட்டுப்பாடானது டுவுவுநுக்கும் சிறிலங்கா படைதுறையினருக்கும் இடையே மாறிமாறி நகர்ந்து கொண்டிருந்த போது, அரசானது தான் கைப்பற்றிய பகுதிகளிலிருந்த துயிலுமில்லங்களை உடனேயே அழித்து வந்தது. 1995ம் ஆண்டில் யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றிய போது யாழ்ப்பாணத்தில் மட்டும் கோப்பாய், கொடிகாமம், எள்ளாங்குளம் ஆகிய மூன்று துயிலுமில்லங்கள் அவர்களால் அழிக்கப்பட்டன. 2002இல் போர் நிறுத்தம் கைசாத்திடப் பட்டபோது LTTE ஆனது வட-கிழக்கு எங்குமிருந்த துயிலுமில்லங்களை புனரமைப்பு செய்தது.



யாழ்ப்பாணத்திலுள்ள உடுத்துறை துயிலுமில்லத்தின் எச்சங்கள் (யூலை 2016 )

---

28. °டுழுவுநு அதனது தலைவரான உமா மகேஸ்வரனின் மரணத்தை ஒவ்வொரு யூலை 16 ம் திகதியும் வீரமக்கள் தினமாக எந்த வித வரையறைகளோ ஒடுக்குதலோ இன்றி நினைவு கூருகிறது. (27வது வீரமக்கள் தினம் - வவுனியாவில்) புளொட் செய்திகள், யூலை 17, 2016. எட்டக் கூடிய இடம்:
http:// plotenews.com/?p=24428

ரெலோவினுடைய தலைவர்களான தங்கத்துரை மற்றும் குட்டிமணியின் மரணங்களை நினைவு கூரும் ரெலோவினுடைய சுவரொட்டிகள் வட-கிழக்கு எங்கும் யூலை 2016 இல் ஒட்டப்பட்டிருந்தன. பின்னிணைப்பில் உள்ள புகைப் படத்தை பார்க்கவும்.

ஆனால் 2006ம் ஆண்டில் மோதல்கள் மீள ஆரம்பித்த போது, படைத் துறையானது துயிலுமில்லங்களை மீண்டும் இலக்கு வைத்து அழித்தது. முதலில் கிழக்கிலும் பின்னர் வடக்கிலும் இவ்வாறு செய்யப்பட்டது. இவ்வாறான அடக்கம் செய்யும் இடங்களை அழிப்பதானது 2016லும் தொடர்ந்ததாக செய்திகள் கூறுகின்றன. 675 க்கு மேற்பட்ட போராளிகள் விதைக்கப் பட்டிருந்த தரவை துயிலுமில்லத்தை படையினர் உழுது அழித்து விட்டதாக 2016 ஏப்ரலில் தமிழ் நெற் தெரிவித்திருந்தது.[29]

**"எம்முடைய உறவுகள் புதைக்கப்பட்ட இடத்தின் மேல் அவர்கள் இராணுவ முகாம்களை நிர்மாணித்து, அவர்களின் புதைகுழிகள் மேல் மிதித்துச் செல்கிறார்கள்"** *(கிளிநொச்சி )*

29. "தமிழ் வீரர்களுடைய துயிலுமில்லங்களை புனிதம் குலைப்பது சிங்கள் அரசின் நல்லாட்சி ஆகும்." தமிழ் நெற் ஏப்பிரல் 04, 2016 எட்டக்கூடிய இடம் :
https://www.tamilnet.com /art.html?catid=13&artid=38214
30. LTTE துயிலுமில்லத்தின் மீது சிறிலங்கா பொலிஸ் நிலையம் கட்டுகிறது." தமிழ் காடியன் நவம்பர் 27, 2007. எட்டக்கூடிய இடம்:
http://tamilguardian.com/content/ sri- lanka-builds-police-staionltte-cemeten/

## அட்டவணை 2

வட-கிழக்கில் அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்லங்கள்

| மாவட்டம் | பெயர் |
|---|---|
| அம்பாறை | உடம்பன் குளம் |
| மட்டக்களப்பு[30] | தரவை |
| | தாண்டியடி |
| | வாகரை |
| யாழ்ப்பாணம் | எள்ளாங்குளம் |
| | கோப்பாய் |
| | கொடிகாமம் |
| | சாட்டி |
| | உடுத்துறை |
| கிளிநொச்சி | கனகபுரம் |
| | முழங்காவில் |
| மன்னார் | ஆட்காட்டி வெளி |
| | முள்ளிக்குளம் |
| | பண்டிவிரிச்சான் |
| முல்லைத்தீவு | ஆலங்குளம் |
| | அலம்பில் |
| | கள்ளிக்காடு |
| | மணலாறு (உதய பீடம்) |
| | மணலாறு (புனித பூமி) |
| | முள்ளியவளை |
| | வன்னி விளாங்குளம் |
| | விஸ்வமடு |
| திருகோணமலை | ஆலங்குளம் மூதூர் கிழக்கு. |
| | தியாக வனம் |
| | வெள்ளியன் குளம் |
| | உப்பாறு |
| வவுனியா | ஈச்சம் குளம் |

30. டுவுவுநு துயிலுமில்லத்தின் மீது சிறிலங்கா பொலிஸ் நிலையம் கட்டுகிறது." தமிழ் காடியன் நவம்பர் 27, 2007. எட்டக்கூடிய இடம்:
http://tamilguardian.com/content/ sri- lanka-builds-police-staionltte-cemeten/

இன்று ஒரு துயிலுமில்லமும் விட்டு வைக்கப்படவில்லை. சில துயிலுமில்லங்கள் கைவிடப்பட்டு காட்டுப் பயிர்களினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. கோப்பாய்[31] மற்றும் எள்ளாங்குளம் உள்ளிட்ட ஏனையவை இராணுவ முகாம்களின் அமைவிடமாகி உள்ளனர் மக்கள் எட்டமுடியாதவையாக மாற்றப்பட்டுள்ளன. நேர்காணப்பட ஒருவர் சுட்டிக்காட்டியது போல, இந்த துயிலுமில்லங்களின் புனிதத் தன்மைக்கு பங்கம் விளைவிக்கும் கையில் கல்லறைகளை உடைத்தெடுத்த கற்களைக் கொண்டே, சில இராணுவ முகாம்களுக்கு செல்லும் வீதிகள் அமைக்கப்படடுள்ளன.




யாழ்ப்பாணம் உடுத்துறை துயிலுமில்லத்தில் சில நினைவுக்கற்களில் எஞ்சியிருப்பவை (பேர்ள், யூலை 2016) உடுத்துறை மற்றும் ஆலங்குளம் துயிலுமில்லங்கள் அமைந்திருந்த இடங்களில் பேர்ள் இன் ஆய்வாளர்கள், கல்லறைகளினதும் நடுகற்களினதும் சிதைந்த எச்சங்கள் கற்குவியல்களுக்குக் கீழேயும் பற்றை வளர்ச்சிகளின் கீழேயும் பரவிக் கிடப்பதைக் கண்டார்கள். தெய்வங்களின் படங்கள் உள்ளிட்டதான யாரோ வருகை தந்திருப்பதன் அடையாளங்களை அங்கே காணக்கூடியதாக இருந்தாலும் வெளிப்படையாகத் துயிலுமில்லங்களுக்குச் செல்வதற்குத் தாங்கள் பயப்படுவதாக நேர்காணப்பட்டவர்கள் விளக்கினார்கள்.

**"துயிலுமில்லங்களின் எச்சங்கள் இருக்கும் இடங்களுக்கு நாங்கள் செல்வதை தடுக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புவதால் மாவீரர் நாளுக்கு முந்திய நாட்களில் படைத்துறையினர் அங்கே நிலை கொள்ளச் செய்யப்படுவார்கள்".** *(திருகோணமலை)*



யாழ்ப்பாணம் உடுத்துறை துயிலுமில்லத்தில் சமயச் சின்னங்கள் (பேர்ள் யூலை 2016)

---

31. LTTE துயிலுமில்லத்தில் அமைந்துள்ள இராணுவ தலைமைச் செயலகம். http://www.bbc.com/sinhala/news/story/2011/03/110307_jaffna_cemetery.shtml.

**"எமது அஞ்சலியை செய்ய வேறு நாட்களில் இரகசியமாக உட்செல்ல நாங்கள் நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறோம்"** *(யாழ்ப்பாணம்)*

அவர்களில் ஒருவர் கூறியது போல், "நிலைமை பாதுகாப்பானதென்று உணர்ந்தால் நாங்களே அவற்றை மீள் நிர்மாணம் செய்வோம்" (முல்லைத்தீவு) என்று கூறும் அளவுக்கு மரணித்து விட்டவர்களின் குடும்பங்களிடையே, துக்கம் அனுஸ்டிப்பதற்கு ஒரு இடத்தின் தேவை வலுவானதாக இருக்கிறது. ஒன்றுகூடுவதற்கும் நினைவு கூருவதற்குமான சமூகரீதியான இடங்களாக விளங்கிய வேறு நினைவகங்கள் நினைவுச் சின்னங்கள் மற்றும் நினைவுப் பூங்காக்களின் முக்கியத்துவம் பற்றியும் நேர்காணப் பட்டவர்கள் வலியுறுத்தினார்கள். "நாங்கள் எமது போராட்டத்தை நினைவு கூரும் விதத்தில் எமது நகரத்தில் நினைவுத் தூண்இருந்தது. அதனை அழிக்கும் வரை விசேட நாட்களில் அங்கே எமது அஞ்சலிகளை செலுத்தியிருந்தோம். (திருகோணமலை) குறிப்பான படுகொலைகள் இடம் பெற்ற அமைவிடங்கள் மற்றும் டுவுவுநு போராளிகளை நினைவு கூர அமைக்கப்பட்டிருந்த பல சிலைகள் மற்றும் அமைவிடங்கள் அழிக்கப் பட்டிருக்கிறதைக் குறிப்பிட்ட நேர்காணப்பட்டவர்கள் (விரிவான தகவல்கள் மற்றும் படங்களுக்கு பின்னிணைப்பை பார்க்கவும்) அவை மீள அமைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார்கள்.

**"நினைவுச் சின்னங்களை புனர் நிர்மாணம் செய்வதற்கு, நாங்கள் செய்யும் செலவை நட்ட ஈடாக வழங்குவதற்கு அரசு முன் வர வேண்டும்."** *(யாழ்ப்பாணம்)*



யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இருந்து அழிக்கப்பட்ட டுவுவுநு நினைவு சின்னமொன்றின் எச்சங்கள் (பேர்ள் யூலை 2016)

## போட்டி போடும் நினைவுச் சின்னங்கள்

**"அவர்கள் எம்மைத் துடைத்தழித்து விட்டுக் கொண்டாடுகிறார்கள்"** *(அம்பாறை)*

தமிழ் நினைவு மண்டபங்களும் சின்னங்களும் திட்டமிட்டு அழிக்கப்பட்ட அதேவேளை, அரசானது தனது படையினரின் வெற்றிச் சின்னங்களை வட-கிழக்கு எங்கும் அமைத்தது. அவற்றின் பிரசன்னமானது துயிலுமில்லங்களையும் நினைவுப் பூங்காக்களையும் இழந்த வேதனைக்கு சமமான வேதனைகளை தந்திருப்பதாக பல்வேறு நேர்காணப்பட்டவர்களும் சுட்டிக்காட்டினார்கள். பல நேர்காணப்பட்டவர்கள் இந்த வெற்றி நினைவுச் சின்னங்களை காண்பதை வேதனையூட்டுவதும் மீள வடுக்களை ஏற்படுத்துவதுமான அனுபவம் என்று வர்ணித்தார்கள். "அந்த கோர உருவத்தை தாண்டி நான் நடந்து போகும் போது, ஒவ்வொரு நாளும் நான் அனுபவித்த பயங்கரங்கள் எனக்கு நினைவூட்டப்படுகின்றன. நான் மறுபக்கம் பார்ப்பேன். என்னால் அதனைப் பார்க்கவே முடியாது" (கிளிநொச்சி)



புதுக்குடியிருப்புக்கு அருகில் உள்ள சிறிலங்காவின் வெற்றிச் சின்னம் (பேர்ள், யூலை 2016)

பாதிக்கப்பட்ட சமூகத்திலே உள்ள பலருக்கு இந்த நினைவுச் சின்னங்கள் தாங்கள் அடிமைப் படுத்தப்பட்டதை நினைவுட்டுவதற்கென்று அமைக்கப்பட்ட சின்னங்களாகவே உணர்வாகின்றன. "அவை வேண்டுமென்றே, நாம் அவைகளைக் கடந்து போகவேண்டுமென்றே, பெரும் வீதிகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன." (முல்லைத்தீவு)

கிளிநொச்சி முல்லைத்தீவு உள்ளிட்ட வன்னயின் மற்றைய இதயப் பகுதிகளில் மிக வேறுபட்டுத் தெரியக்கூடிய படைதுறை நினைவுச் சின்னங்களை அமைப்பதற்கான தெரிவானது, வேண்டுமென்றே செய்யப்பட்டதும் துன்பமூட்டும் இயல்பானதுமான ஒரு வெற்றிக் கித்தாய்ப்பு என்றே புலனுணர்வு கொள்ளப்படுகிறது. வெற்றிச் சின்னங்கள் வட-கிழக்கில் அமைக்கப்பட்டிருக்கும் எண்ணிக்கையில் சிங்களவர்கள் அதிகமாக வாழும் தெற்கில் அமைக்கப்படவில்லை என்பதை நேர்காணப்பட்டவர்கள் விரைந்து சுட்டிக் காட்டினார்கள்.

**"நாங்கள் தோற்றுப் போனோம். அவர்கள் அதை எமக்கு நினைவூட்ட விரும்புகிறார்கள். அல்லாவிட்டால் ஏன் அவற்றை இங்கு கட்டவேண்டும்? இந்த அளவுக்கு அவை தெற்கில் இருக்கின்றனவா? அவர்களுடைய பகுதிகளில் நினைவுச் சின்னங்களை அமைத்தால் அவர்கள் என்ன கூறுவார்கள்?"**
*(மட்டக்களப்பு)*

இந்த எதிர்மறை தகவு நோக்குகள், இந்த படைத்துறை நினைவுச் சின்னங்கள் குறியீடு செய்யும் விடயமாக, வெற்றி பெற்றவர் பிரமாண்டமான தீங்கொன்றை முறியடித்திருக்கிறார் என்பது போன்ற மாயையை உருவாக்குகிறது. புதுக்குடியிருப்பில் [32] போர் முடிவுக் கட்டத்தில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் மரணமடைந்த இடத்துக்கு அண்மையாக அமைக்கப்பட்டிருக்கும் வெற்றிச் சிலை மற்றும் அருங் காட்சியகம் தொடர்பாக நேர்காணப்பட்டவர்கள் குறிப்பான மனக்குழப்பத்துக்கு உட்பட்டிருக்கிறார்கள்.

(32) புதுக்குடியிருப்பில் அமைந்திருக்கும் போர் வெற்றி அரும் காட்சியகத்தில் டுவுவுநு யிடமிருந்து கைப்பற்றப்பட்ட படைகலன்கள், படகுகள், நீர்மூழ்கிகள் என்பன காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. பேர்ள் ஆய்வாளர் கள் யூலை 2016 இல் அங்கு சென்ற போது, படைத்துறையானது அங்கிருந்த எல்லாவற்றையும் புதிய அமைவிடம் அதாவது, டுவுவுநு இனர் நீர்மூழ்கித் துறையாக பயன்படுத்திக் கொண்டிருந்த இடத்துக்கு நகர்த்தும் செயல் முறையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது


அவை போர் உல்லாசப் பயணத்துறையை முனைப்புப் படுத்தி காட்டியதோடு, உள்ளூர் மக்களால் புனிதமான இடங்கள் என்று நோக்கப்படும் இடங்களை அருவருப்புடன் நோக்குவதற்கே சிங்கள உல்லாசப் பயணிகள் வருகிறார்கள் (கிளிநொச்சி)[33]. சில அமைவிடங்கள் நினைவுச் சின்னங்கள் விற்பனைக்கு வைத்திருக்கும் பரிசு பொருள் விற்பனை நிலையங்களைக் கூட கொண்டிருக்கின்றன. கிளிநொச்சியில் வீழ்த்தப்பட்டிருக்கும் நீர் தாங்கிக்கு அருகில், கோப்பி கோப்பைகள், புத்தகங்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமான இறுவெட்டுக்கள் மற்றும் "கிளிநொச்சியை மீள எழுப்புதல்"என்று குறுக்காக அச்சிடப்பட்ட ரீ -சேட்டுகள் முதலியவற்றை விற்பனை செய்யும் ஒரு சிறிய கடை இருக்கிறது. அவ்விடத்தில் தமிழ் மொழி முற்றுமுழுதாகத் தவிர்க்கப்பட்டுள்ளமை உத்தேச வாடிக்கையாளர் யார் என்பதைத் தெளிவாக்குகிறது.



கிளிநொச்சி, ஆனையிறவிலுள்ள சிறிலங்காவின் வெற்றி நினைவுச் சின்னம் பேர்ள்.யூலை 2016

(33) ஆயுதம் தரித்த முரண்பாடு முடிவடைந்த பின் உடனடியாகவே பேரூந்துகள் நிறைந்த சிங்கள் சுற்றுலாப் பயணிகள், அரசு செலவில் இந்த இடங்களுக்கு வருகை தந்தார்கள். (உதாரணமாக "டுவுவுநு இறுதியாக நிலைகொண்டிருந்த இடத்துக்கு அண்மையாக அமைந்திருப்பதும் தமிழர்கள் ஒரு போதும் வருகை தராததுமான ஒரு நினைவுச் சின்னம் அமைந்திருக்கிறது." த ஹிண்டு, ஒக். 24.2012 எட்டக்கூடிய இடம்: http:// ww.thehindu.com /news/intemational/near- site-of-lttes-last-stand-a-victiry-memorial-that- tamils-dont-visit/artide4019705.ece.)

பின்னர் போர் உல்லாசப் பயணங்கள் வீழ்சியடைந்து விட்டாலும் பேர்ளின் ஆய்வாளர்கள் மேலே குறிக்கப்பட்ட ஒவ்வொரு அமைவிடங்களிலும் தெற்கிலிருந்து வருகை தந்த சிங்கள சுற்றுலா பயணிகளை தனிப்பட்ட முறையில் அவதானித்திருந்தார்கள்.




கிளிநொச்சியில் இருக்கும் அரசு பரிசுப் பொருள் விற்பனை நிலையம் -எழுத்துக்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டும் (பேர்ள் யூலை 2016)

## படைத்துறையினரின் இருப்பு.

**"இறந்து போய்விட்ட மக்கள் பெரும்பாலும் படைத்துறையினராலேயே கொல்லப்பட்டார்கள். படைத்துறையினர் இங்கு தரித்திருக்கும் போது அவர்களை எப்படி நினைவு கூர முடியும்?"**
*(திருகோணமலை)*

வட-கிழக்கு முழுவதும் காணப்படும் ஆயுதப் படையினரின் தொடர்ச்சியானதும் வக்கிரமானதுமான பிரசன்னம் நினைவு கூருதலுக்கான தடைகள் தொடர்பாக நேர்காணப்பட்டவர்கள் அளித்த சாட்சியங்களின் அடிநாதமாக விளங்கியது. அவர்களில் அனேகமானோர், பார்வைக்கு தென்படுகிற படையினரின் எண்ணிக்கைக்கு இந்த அரசின் கீழ் குறைந்திருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டாலும், நாளாந்த வாழ்க்கை படைத்துறை மயமாக்கப்படுதல் தொடர்வதாக அவர்கள் வலியுறுத்தினார்கள். முந்திய மோதல் வலயங்களில் இருக்கும் முகாம்களின் எண்ணிக்கை குறிப்பிடத் தக்க அளவில் அதிகமானதாக இருப்பதோடு, பொலிஸ் மற்றும் படைத்துறை கண்காணிப்புகள் "செயல் முனைப்பானதாக தொடர்வதோடு, பயமுறுத்துபவையாகவும் இருக்கின்றன".[34] குவிக்கப்பட்ட கவனமானது போரின் இறுதிக் கட்ட ஆயுதம் தரித்த மோதல் நிகழ்ந்த வடக்கின் மீது செலுத்தப்பட்டாலும், கிழக்கும் கனசெறிவான படையமயப்படுத்தப் படுதலுக்கு இப்போதும் உட்படுத்தப்பட்டிருக்கிறது. பல சந்தர்ப்பங்களிலே, தொடர்ச்சியான படைத்துறை பிரசன்னத்தின் விளைவாக, பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் மீது துஷ்பிரயோகத்தை மேற்கொண்டவர்களின் பக்கத்திலேயே வாழவேண்டியிருக்கிறது என்று வடக்கிலும் கிழக்கிலும் இருக்கும் நேர்காணப்பட்டவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள். பெரும்பாலான அட்டூழியங்களுக்காக குற்றம் சாட்டப்பட்ட இராணுவ வீரர்கள், வட-கிழக்கு முழுவதும் ஈடுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள். ஆட்கள் மாறியிருந்தாலும் நிறுவகங்கள் அப்படியே இருக்கின்றன. ஒரு நேர்காணப்பட்டவர் தனது சமூகத்தில் தொடர்ச்சியான கடற்படையினரின் பிரசன்னம் இருப்பதை சுட்டிக் காட்டியதைப் போல் "எங்களுடைய மக்கள் எந்த முகாம்களில் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்களோ, அதே முகாம்களை கடந்து செல்லவேண்டி இருக்கிறது." (திருகோணமலை)

34. "சிறிலங்கா சீர்திருத்த செய்முறையை பாய்ந்து தொடங்குகிறது" சர்வதேச நெருக்கடி குழு மே 18, 2016. எட்டக்கூடிய இடம். https://d207landvipOwj.cloudfront.net /278-sri-lanka-jumpstarting-the-reform-process.pdf.

படைத்துறைப் பிரசன்னம் முகாம்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லை. பேர்ள் -இன் ஆய்வாளர்கள் சிகையலங்கார நிலையங்கள், பண்ணைகள், சிறிய கடைகள், மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் முதலியவற்றை சீருடை அணிந்த போர்வீரர்கள் நடத்துவதை அவதானித்தார்கள். இவற்றுள் அனேகமானவற்றில் சிங்களத்தில் மட்டுமே குறியீடுகள் இருந்தன.




வடமாகாணத்திலுள்ள படையினரின் சிற்றுண்டிச் சாலை (பேர்ள் யூலை 2016)

இந்த பிரசன்னத்தின் பெறுபேறாக இடைவிடாது தொடரும் அச்சம் நிறைந்த சூழ்நிலை உள்ளது. முன்பு LTTE இன் வலுவான நிலைகளாக இருந்த இடங்களில் இந்த அச்சநிலை அதிகமாகவுள்ளது. இந்த இடங்களில் இராணுவத்தின் தலையீடு மிகப் பொதுவாக நிகழும் விடயமாக இருக்கிறது. உண்மையைச் சொல்லப் போனால் கிளிநொச்சியில் இடம் பெற்ற பேர்ள் -இன் குழு அமர்வொன்றுக்கு படைத் துறையினரால் இடையூறு விளைவிக்கப்பட்டது. இதன் போது, குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ள தூரத்தில் இருந்து பயணித்து வந்த, போரால் பாதிக்கப்பட்ட 7 பெண்கள், புலனாய்வு அதிகாரிகள் என்று தோன்றியவர்களால் விசாரணை செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்கள். பல்வேறு நேர்காணப்பட்டவர்களும், இது பொதுவாக இடம்பெறும் விடயம் என்ற கூறினார்கள். தங்களுடைய பாதிக்கப்பட்டவர்கள் என்ற தகுதிநிலையோடு தொடர்புபட்ட எதிர்ப்பு ஆர்பாட்டங்கள் மற்றும் கூட்டங்களில் பங்குபற்றினால் இராணுவ செயற்பாட்டாளர்களிடமிருந்து தொலைபேசி அழைப்புகளை அல்லது வருகை தருதல்களை எதிர்பார்ப்போம் என்று அவர்கள் கூறினார்கள். யாராவது LTTE யோடு தொடர்புபட்டவர்களாக இருந்தால் (அல்லது அப்படி எண்ணப்பட்டால்) அவர்களைப் பொறுத்தவரை இது குறிப்பாக உண்மையாக இருந்தது. முன்னால் போராளிகள் அல்லது டுவவுநு குடும்பங்கள் தொல்லைப் படுத்தப்படுவது நேரடியற்ற விளைவுகளை ஏற்படுத்துவதோடு அவர்களுடைய அயலவர்களுடனான உறவுகளையும் பாதிக்கிறது.

**"ஒரு முன்னாள் போராளி புலம்பியது போல், "இவ்வளவத்துக்கும் பிறகும் சமூகத்தினால் ஒதுக்கப்பட்டவர்களாக இங்கே வாழ்கிறோம் என்பதனை எதிர்பார்க்கவில்லை".** *(அம்பாறை)*

இந்த செயலியக்கங்களின் பின் விளைவுகள் நினைவு கூருதல் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். முன்னைய பகுதிகளில் பதிவு செய்யப்பட்டிருப்பது போல் வட-கிழக்கை இராணுவமயப்படுத்துதலானது பொதுமக்கள் மற்றும் போராளிகளின் சாவுகளை நினைவு கொள்வதின் மீது கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தவும், அரச வெற்றி நினைவு சின்னங்களின் ஊடாக வடுக்கள் பற்றிய நினைவுகளை வலிந்து திணிக்கவும் வழிவகுக்கிறது. ஆனால் பல நேர்காணப்பட்டவர்கள் இராணுவத்தினரின் இருப்பு விளைவிக்கும் முக்கிய மேலதிக விளைவு ஒன்றை சுட்டிக் காட்டினார்கள். கடந்த காலம் தொடர்பான வரலாற்று அறிவை அடுத்த தலைமுறையினரிடம் கையளிப்பதன் மீதான நெருக்கடிகளே அவை.தேசிய பாடத் திட்டத்தை பின்பற்றும ஒரு கல்வி முறையின்கீழ் அப் பாடத் திட்டம் சிங்கள சார்புடைய வரலாற்றினைக் கற்பிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளமை இங்கு குறிப்பான அக்கறைக்குரிய விடயமாகும். . ஒரு பாடசாலை ஆசிரியர் தெளிவு படுத்தியதைப் போல் "சிங்கள தமிழ்மொழி பாடத் திட்டங்களுக்கிடையே வேறு பாடு இருக்கிறது. வரலாறு என்ற பாடத்துக்கு வரும் வரை அது அப்படித்தான் இருக்கிறது. வரலாற்றில் ஒரே மாதிரியாக இருக்கிறது. தமிழர்களின் தெளிவான வரலாறு அவற்றில் ஓரம் கட்டப்படுகிறது." (கிளிநொச்சி). தங்கள் பிள்ளைகளை அபாயத்துக்கு உட்படுத்தும் என்ற பயத்தினால் தாங்கள் இந்த இடைவெளியை வீட்டில் வைத்து நிரப்ப பயத்துடன்

இருக்கிறோம் என்று பல நேர்காணப்பட்டவர்கள் கூறினார்கள். இதை எதிரொலிக்கும் கருத்துகளை வேறு பல நேர்காணப்பட்டோரும் தெரிவித்தார்கள். "என்ன நடந்தது என்று எமது பிள்ளைகளுக்கு சொல்ல நாங்கள் பயப்படுகிறோம். அவர்கள் பாடசாலையிலோ வேறு எங்குமோ அதைப் பற்றி கதைப்பதால் ஆபத்துக்குள் அவர்களை உட்படுத்த நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் படையினருடன் பிரச்சினைக்குள் மாட்டிக் கொள்ளக் கூடும்" என்று ஒருவர் விளக்கினார். (மட்டக்களப்பு)



யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸ் மற்றும் கடற்படையினர் பதிவு செய்கிறார்கள். (பேர்ள், மார்ச், 2016)

## IV. நினைவு கூருவதற்கான உரிமை

**"நினைவு கூர எங்களை அனுமதிக்காதது எங்களுக்கு உரிமைகள் இல்லை எனபதைக் காட்டுகிறது."**
*(திருகோணமலை)*

மோதல்களுக்கு பிந்திய பிரிந்த சமூகங்களிலே நினைவு கூரும் உரிமை என்பது அனேகமான சந்தர்ப்பங்களிலே பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கத்துக்கான நாட்டத்தோடு தொடர்புபட்டதாக இருக்கிறது. நினைவு கூருதலானது தண்டனை விலக்குக்கு எதிராக போராடுதல், துஷ்பிரயோகம் தொடர்பான முழுமையானதும் நீடித்து நிலைக்கக்கூடியதுமான பொறுப்புக்கூறலை நிலைப்படுத்துதல், ஒரு சமூகம் என்ற வகையில் முன்நோக்கி செல்லுதல் முதலியவற்றின் ஒரு திருப்புமுனை மூலக் கூறாகவே நோக்கப்படுகிறது. நினைவுகூருதல் தொடர்பான ஒரு அறிக்கையிலே, பண்பாட்டு ரீதியான உரிமைகள் துறைசார் ஐநா விசேட இணைக்கப்பாட்டாளர் "நல்லிணக்க செய்முறையிலே நினைவுகூருதல் என்பது தவிர்க்க முடியாத ஒரு அரசியல் மற்றும் சமூக பண்பாட்டு அம்சமாக ஆகிவிட்டிருக்கிறது என்று முடிவாக சொல்லியிருக்கிறார்."[35] இதே போலவே உண்மை, நீதி, செப்பனிடுதல், மீள் நிகழ்வுக்கு எதிரான உத்தரவாதம் தொடர்பான ஐநா விசேட இணைக்கப்பாட்டாளர் பப்ளோ டி கிறெய்வ், "ஒரு பகிர்ந்து கொள்ளப்படும் அரசியல் சமூகத்தின் பகுதியாக மற்றவர்கள் இருக்க வேண்டும் என்று எந்த அளவுக்கு நாம் விரும்புகின்றோமோ அந்த அளவுக்கு அவர்கள் எமது திட்டத்தை உண்மையாகவே பகிரப்படுவது என்று ஏற்கும் விதத்தில் அவர்களுக்கு வழங்க வேண்டும்." என்று வாதிட்டிருக்கிறார்.[36]

ஆனால் நினைவுகூருதலுக்கான உரிமையானது உண்மை மற்றும் நீதிக்கான உரிமையைக் குறிப்பாக சுட்டிக் காட்டுகிற அதேவேளை, பொறுப்புக்கூறல் தொடர்பான தேடலிலான அதனது நிமித்தகாரண வகிபாகத்தை விட அதிகமானவற்றை உள்ளடக்குவதாக இருக்கிறது. ஒரு துஷ்பிரயோகத்தின் வரலாற்றை ஏற்றுக் கொள்ள தவறுவதென்பதும் ஒரு மனித உரிமை மீறலாகும். வட-கிழக்கு தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய துன்பங்களை அங்கீகரிக்காமையானது தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கிற ஒரு காயப்படுத்தலாக இருக்கும். தண்டனை விலக்கின் விளைவைப் பற்றி ஒருவர் சொன்னது போல் "நான் இன்னமும் அதை வாழ்ந்து

(35) – A/HRC/25/49 பந்தி 10இகலாச்சார ரீதியான உரிமைகள் துறைசார் ஐநா விசேட இணைக்கப் பாட்டாளர் பரீடா சாஹிட், ஜனவரி 23, 2014, எட்டக்கூடிய இடம்: http://www.ohchr.org/EN/HRBodies/HRC/ regularSessions/Session25/Documents/A HRC 25 49 ENG .DOC

(36). "நினைவு கூரும் கடமை" பப்ளோ டி கிறெய்வ், ICTJ, மே 04, 2016 எட்டக்கூடிய இடம்: https://www.icti.org debate/article/duty –remember.

கொண்டிருக்கிறேன்." (மட்டக்களப்பு)

பல்வேறு சா்வதேச பிரகடனங்களும் விதிமுறைகளும் " கடந்த கால குற்றங்கள் பற்றி பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளல் என்பது பாதிக்கப்பட்டவா்களுக்கு இன்றியமையாததாகும்" என்று பிரகடனப்படுத்தி உள்ளன.[37] குவாட்டமாலாவில் இடம்பெற்ற வரலாற்று வெளிப்படுத்தல்கள் தொடா்பான ஆணைக்குழுவின் வார்த்தைகளில் சொல்வதானால் "நினைவு கூருதலானது மனித மாண்பின் விழுமியங்கள் மற்றும் போராட்டத்தின் பெறுமதி முதலியவற்றை மீட்டெடுப்பதற்கு இடமளிக்கிறது."[38]

நினைவுகூருவதற்கான பாதிக்கப்பட்டவா்களுக்கான உரிமையானது அதனோடு சரி ஒப்பாயிருப்பதான, அரசின் மீது சுமத்தப்பட்டுள்ள கடமையோடு இணையிணையாக வகுக்கப்பட்டிருக்கிறது. "ஒரு மக்கள் தொகையினை அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறை வரலாறு தொடர்பான அறிவைக் கொண்டிருப்பதென்பது அவர்களுடைய மரபுரிமையின் ஒரு பகுதியாக இருக்கிறது என்பதோடு, அதன் காரணமாகவே நினைவுகொள்வது தொடா்பான அரசின் கடமையை நிறைவேற்றுவதற்கான பொருத்தமான வழிமுறைகளில் அது பேணப்படவும் வேண்டும்"[39] எனவே நினைவுகூருதலில் செயல் முனைப்பாக தலையீடு செய்வதென்பது அரசினுடைய "கடந்த கால மீறல்கள் குறித்த தகவல்களை துல்லியமாக பேணப்படுவதை உறுதிசெய்யும் அடிப்படை பொறுப்பை"[40] மீறுவதாக அமைகிறது.

ஐநா விசேட இணக்கப்பாட்டாளர் டி.கிறெய்ப் இன் வார்த்தைகளில் சொல்வதானால் "எமது சக குடிமக்கள் மறக்காமல் இருக்க வேண்டும் என நாங்கள் நியாய பூர்வமாக எதிர்பார்க்கும் எதையும் நினைவுகூரவேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது."[41] வட-கிழக்கில் பிழைத்திருப்பவர்களுக்கு இந்த பட்டியல் நீளமானதாகும். 2009 ஜனவரியிலிருந்து யூன் வரையான தனது அனுபவங்களை விளக்கிய பெண்ஒருவர்" ஒவ்வொரு நாளும் நான் மரணித்த உடல்களைக் கண்டேன் .... அதை நான் மறக்க முடியாது" என்று விளக்கினார். (முல்லைத்தீவு)

குடிசார் மற்றும் அரசியல் உரிமை என்ற அதன் தகைநிலைக்கு அப்பால், நினைவு கூருதலானது ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கும் அதனைப் பேணுவதற்கும் நடுநாயகமாக திகழ்கிறது. குவாட்ட மாலாவில் உள்ள வரலாற்று தெளிவு படுத்தலுக்கான ஆணைக்குழு குறிப்பிட்டிருப்பதைப் போல "வரலாற்று ரீதியான நினைவுகள், தனிப்பட்டவையாக இருந்தாலென்ன கூட்டானவையாக இருந்தாலென்ன அவை தேசிய அடையாளத்தின் அடிப்படையை உருவாக்குபவையாக இருக்கின்றன"[42]. குறிப்பாக துக்கம் அனுஸ்டிக்கும் வழக்கங்கள், குறித்த தனிநபரை பகிரப்படும் பண்பாட்டால் ஒன்றிணைந்திருக்கும் பரவலான கூட்டின் உறுப்பினராக இருப்பதை உறுதிப்படுத்தும் முக்கியமான அடையாளத்தை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. நினைவுகூருதல் என்பது உலகளாவிய ரீதியான தமிழ்ப் பண்பாட்டின் முக்கியமான கூறாக இருப்பதோடு தலைமுறை தலைமுறையாகவும் அப்படி இருந்து வந்துள்ளது. சிறிலங்காவின் வட-கிழக்கிலே மரணித்து விட்ட உறவினர்களின் படங்களுக்கு மலா்மாலை சூடுதல், சுடர் ஏற்றுதல், படையலிடுதல் போன்ற பரந்த தமிழ் மரபுகள், ஆயுதப் போராட்ட காலத்தில் நெடுகவும் மேலதிக முனைப்பை பெற்றன.

---

37. A/HRC/25/49 பந்தி 10இகலாச்சார ரீதியான உரிமைகள் துறைசார் ஐநா விசேட இணக்கப் பாட்டாளர் பறீடா சாஹிட், ஜனவரி 23, 2014, எட்டக்கூடிய இடம்: http://www.ohchr.org/EN/HRBodies/HRC/ regularSessions/Session25/Documents/A HRC 25 49 ENG .DOC

38. "மௌனத்தின் நினைவுகள்" வரலாற்று தெளிவு படுத்தலுக்கான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை (CEH) பெப், 1999 எட்டக்கூடிய இடம்: https://www.aaas.org/sites/default/files/uploads/ mos en.pdf.

(39). நீதி வழங்குதல் மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் மனித உரிமைகள் கோட்பாடு 2 E/CN.4/SUB.2/1997/20 உரிமைகள் தொடர்பான ஆணைக்குழு யூன் 26, 1997 எட்டக்கூடிய இடம்:http://scholarship.law.duke. edu/cgi/view content.cgi?article=1028&context=lcp.

(40). "முரண்பாட்டின் பின்னான நீதி தொடர்பான சிக்காக்கோ கோட்பாடுகள்" (2007) எட்டக்கூடிய இடம்: https: //law.depaul.edu/ about/centers- and –institues/international-human-rights- law-institute/Documents/Chicago principles.pdf.

(41). "ஒண்லைன் விவாதம்: கூட்டு நினைவு கூருதல் நல்லிணக்கத்துக்கு முட்டுக் கட்டையாக இருக்குமா?"ICTJ மே 04,2016 எட்டக்கூடிய இடம்: https.//www.icti.org/news/online-debate-remembrance- reconciliation.

(42). "மௌனத்தின் நினைவுகள்" வரலாற்று தெளிவு படுத்தலுக்கான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை (CEH) பெப், 1999 எட்டக்கூடிய இடம்: https://www.aaas.org/sites/default/files/uploads/ mos en.pdf.

**"எங்களுடைய பிள்ளைகளின் எச்சங்களுக்கு அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்று பாருங்கள்"** *(திருகோணமலை.)*

பெருந்தொகையில் நிகழ்ந்த மரணங்களின் பின்விளைவுகளால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் சமூகங்களுக்கு, நினைவு கூருதலின் வகிபாகமானது குறிப்பான முக்கியத்துவத்தைப் பெற்றதாக இருக்கிறது. 1994 க்கு பிந்திய றுவாண்டா தொடர்பாக ஒரு கல்விமான் குறிப்பிட்டிருப்பது போல், "முன்பு தாங்கள் பரஸ்பரம் தங்கியிருப்பதான உறவுகளில் யாருடன் ஈடுபட்டிருந்தார்களோ, அவர்களில் யாரோடு சமூக உறவுகளை மேற்கொண்டிருந்தார்களோ, அந்த நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் அயலவர்கள் இல்லாமையால் கறைபட்டுப் போன ஒரு நிகழ்காலத்தின் வாழ்வது என்றால் எப்படி இருக்கும் என்பதன் சிக்கலான இடர்பாட்டு நிலைகளுக்கூடாக மக்கள் வாழ்க்கையைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்."[43] இந்த விவரிப்பானது குறிப்பிடத் தக்க எண்ணிக்கையிலான பொதுமக்கள் மற்றும் போராளிகளின் மரணங்களால் ஆழமான முறையில் மாற்றப்பட்டுவிட்ட குடும்ப மற்றும் சமூக உறவு முறைகளைக் கொண்டிருக்கின்ற, வட-கிழக்கில் இருக்கின்ற தமிழ் குடிமக்கள் தொகையினரின் அனுபவங்களை உள்ளடக்குவதாக இருக்கிறது. இருந்தும் ஒரு நேர்காணப்பட்டவர் கூறியது போல, "வடுக்கள் ஆறும் பாதையின் ஊடாகச் செல்ல மக்கள் அனுமதிக்கப் படுகிறார்களில்லை. அதனைக் கையிலெடுக்கவே அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை." (வவுனியா)

## V. முடிவுரை

"உலகெங்குமுள்ள தமிழர்கள் நினைவு கூருகிறார்கள் ஆனால் எமக்கு முடியாது" (மட்டக்களப்பு)

வட-கிழக்கில் வாழும் தமிழர்களின் நிலை கிலியூட்டுவதாகவே இருக்கிறது. பாதுகாப்புப் படையினரின் பிரசன்னம் குறைக்கப்படும் என்றும், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை உரிமையாளர்களுக்கு திருப்பி கொடுப்பதாகவும் புதிய அரசிடமிருந்து அறிவித்தல்கள் வந்து கொண்டிருந்தாலும், முன்னைய போர் வலயமானது இன்னமும் அதிக இராணுவமயப்படுத்தப் பட்டதாகவே இருக்கிறது. இயல்பு வாழ்க்கையானது முடக்கப்பட்டுள்ளதோடு, தம்மீது எந்நேரமும் வன்முறை ஏவப்படலாம் என்ற அச்சத்துடனேயே மக்களின் அன்றாட வாழ்க்கை நகர்கிறது. ஆயுத மோதலின் போது தங்கள் உயிர்களை இழந்தவர்களை நினைவுகூர்வதற்கான தமிழ் சமூகத்தின் முயற்சிகள் மீது இது ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. அரச அட்டூழியங்களுக்கு பலியானவர்களின் குடும்பத்தினரைப் பொறுத்தவரை, அவ் அட்டூழியங்களை நிகழ்த்தியவர்களின் பிரசன்னமானது அவர் அனுபவித்த துன்பங்களை மீள நினைவூட்டுவதாகவும், அந்த நினைவுகளை முடிவுக்கு கொண்டு வருவதைத் தடுப்பதாகவும் இருக்கின்றது. தங்கள் துன்பங்களுக்கு அங்கீகாரம் பெறுவதற்கான மற்றும் தாங்கள் நேசித்தவர்களின் தலைவிதி பற்றிய தகவல்களை பெறுவதற்கானதுமான முயற்சிகள் இராணுவத்தினரின் தடைகள் மற்றும் தொல்லைப்படுத்தல்களை எதிர்கொள்கின்றன. இராணுவத்தினரைப் பொறுத்தவரை தண்டனை விலக்கு கலாச்சாரத்தை நித்தியமாக வைத்துக் கொள்ளும் ஒரு மறைவான நோக்கமும் அவர்களுக்கு இதில் இருக்கிறது. பொதுமக்கள் பெருந்தொகைகளில் இழக்கப்பட்ட நிகழ்வுகளை நினைவுகூருவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் உணர்ச்சியை தூண்டி விடும் அரசியல் கூற்றாகவே பார்க்கப்படுகின்றன. எப்படியாயினும், தகவு நோக்குகள் எப்படி இருப்பினும் நினைவு கூருவது "அவர்களுடைய கடமை" என்பதில் விடாப்பிடியோடு பலர் இருக்கிறார்கள்.

**"நினைவு கூருதல் என்பது ஒரு பண்பாட்டு ரீதியான கட்டாயமே தவிர ஆத்திர மூட்டுவதல்ல.** *கிளிநொச்சி*

பலியாகிப் போன தமிழ் மக்களை நினைவுகூருவதே சந்தேகத்தையும் பலத்த ஒடுக்குமுறையையும் எதிர்கொள்கிறதென்றால், த.வி.பு யின் வீழ்ந்து விட்ட போராளிகளை நினைவுகூருவதானது அவற்றைவிட மோசமான விளைவுகளைச் சந்திக்கும். டுவுவுநு யினரைக் கௌரவித்தல் மீதான தடை அப்படியே இருப்பதோடு அது தீவிரமாக நடைமுறைப்படுத்தவும்படுகிறது. "நினைவுகூரும் உரிமை எங்களுக்கு இல்லை" (திருகோணமலை) அரசானது பயங்கரவாத நடவடிக்கைகள் மீதான சட்ட பூர்வமான வரையறை என்ற

---

(43). எறெய்மெய்ன் லோறா 2014 சமகால றுவாண்டாவிலே தனிமனித நிலை வன்செயல் நினைவு கூரல் என்ற அறப்பணி முரண்பாடு மற்றும் வன்செயல் தொடர்பான சர்வதேச சஞ்சிகை 8(1) : 16-29

அடிப்படையிலே தடையை விதித்தாலும், அதனை தோற்கடிக்கப்பட்ட ஒரு எதிரியின் மீதான பொருத்தமற்ற கொடுங்கோலாட்சியாகவே பாதிக்கப்பட்ட சமூகம் அதனை எண்ணுகிறது. இந்த வெற்றிவாதத்தை டுவுவுநு துயிலுமில்லங்களினது மற்றும் நினைவிடங்களின் அழிக்கப்பட்டதிலும் அவர்கள் காண்கிறார்கள். "இந்தியர்களால் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கான தீருவில் நினைவுச் சின்னம் மற்றும் பிரபாகரனின் வீடு இவை எல்லாவற்றையுமே அவர்கள் அழித்து விட்டார்கள். ஆனால் நாங்கள் தோற்று விட்டோம் என்று எங்களுக்கு நினைவூட்டுவதற்காக சில எச்சங்களை விட்டு வைப்பார்கள்" (யாழ்ப்பாணம்)


முன்னைய போர் வலயங்கள் முழுவதிலும் வெற்றிச் சின்னங்களை நிர்மாணிப்பதென்பது நினைவுகூருதலை கட்டுப்படுத்த அரசு கைக்கொண்ட இன்னொரு வழியாக இருக்கிறது. வட-கிழக்கில் அனுமதிக்கப்படக்கூடிய நினைவுகூருதலின் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்பெல்லைக்கு அவர்கள் பௌதீக ரீதியான புறஉருவத்தை கொடுக்கிறார்கள். மோதல் முடிவை, தீமையின் மேல் நல்ல சக்திகள் பெற்ற வெற்றியாக உருவகப்படுத்திய ஒரு கதையை பிரகடனப்படுத்தியதன் மூலம், அவர்கள் வன்செயலை இயக்குவிக்கும் பிரிவுகளை மீளப்பதியச் செய்து, ஒரு வலுக் கட்டாயமாக செய்ய வைக்கப்படும் நினைவுகூரல் முறையை, தங்கள் முறையில் நினைவு கூர அனுமதிக்கப்படாத பிழைத்திருப்போருக்காக, அரச தரப்பினரே உருவாக்குகிறார்கள். இந்த நினைவுச் சின்னங்களில் இராணுவ முகாம்களுள் அமைக்கப்படாதவை, தாக்குதல்களுக்கு உட்படுவதை தடுக்கும் முகமாக அவை ரோந்து செய்யப்படும் அளவுக்கு வெறுப்பூட்டுபவையாக இருந்தன. "இராணுவத்தினர் இங்கிருந்து அகற்றப்பட்டால் அவர்களுடைய நினைவுச் சின்னங்களை தகர்த்தெறிய ஒரு முழுநாள் எங்களுக்கு தேவைப்படாது." (முல்லைத்தீவு)

நினைவு கூருவதன் மீது விதிக்கப்பட்டிருக்கும் வரையறைகள் போருக்கு பிந்திய உண்மையான தீர்வுகள் எதுவும் இல்லாமையை குறியீட்டு ரீதியாக எடுத்துக் காட்டுகின்றன. ஒரு விரிவகல்வான அரசியல் தீர்வு இல்லாமல் களத்தில் ஏற்படுகின்ற எந்த ஒரு முன்னேற்றத்தையும் வட-கிழக்கில் இருப்பவர்களில் பலர் தற்காலிகமானதென்றும், எதிர்மாறாக திரும்பக் கூடியதென்றம் தொடர்ந்தும் நோக்குவார்கள். "இந்த மோதல்களுக்கு நீடித்து நிலைக்கக்கூடிய் தீர்வையும், நினைவு கூருவதற்கான எமது உரிமையையும் சிங்களவர் ஏற்றுக் கொள்வதை உள்ளடக்க வேண்டும்" (கிளிநொச்சி) "மைத்திரி (சிறிசேன) ஆட்சிக்கு வந்திருப்பதால் நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். ஆனால் இந்த நிலைமை நாளைக்கு மாறிவிடலாம்" (மட்டக்களப்பு). போருக்கு அல்லது இந்த முரண்பாட்டை எடுத்துக் காட்டுவதாக இருந்த மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுத்த அரசியல் இயங்கியல்களை அடுத்தடுத்து பதவிக்கு வந்த சிறிலங்கா அரசுகள் அர்த்தமுள்ள முறையில் கையாளத் தவறியமையானது, இவ்வாறான ஒரு பரிகாரத்தை செய்வதானது, அரசினுடைய சிங்கள – பௌத்த இயல்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று தெற்கில் காணப்படும் அகல்விரிவான தகவு நோக்கில் வேர்களைக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த உளரீதியான பிறள்வுக்கு அரசியல் ரீதியான பணிவைக் காட்டுவதென்பது, தெற்கு அதிதீவிரவாதத்துக்கு உணர்வூட்ட, அது தன் முறைக்கு தமிழர்களின் துன்பங்களை மீண்டும் கிளறி விடும்.


இந்த தீவினுடைய பிரிந்திருக்கும் சமூகங்களிடையே அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஏற்படுவதானது, வாய்ப்பு என்ற அரசியல் பலகணி திறந்திருக்கும் அதேவேளை, போர் மற்றும் அதனுடைய பின் விளைவுகள் பற்றிய நேர்மையான கலந்துரையாடலில் தங்கியிருக்கும். தற்சமயம் ஒரு தரப்பு மட்டுமே தான் விரும்பும் விதத்தில் போர் பற்றிய விடயங்களில் ஈடுபடக் கூடியதாக இருக்கிறது. விடுதலை இயக்கம் என்ற மரபுரிமையானது தமிழர் அடையாளத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. தங்களின் மரணித்தோரை அவர்கள் பொதுமக்களாக இருந்தாலென்ன அல்லது ஆயுதப் போராட்டத்தில் பங்கெடுத்தவர்களாய் இருந்தாலென்ன, அவர்களை நினைவு கூர விரும்புபவர்கள் அப்படி செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். வெளியகக் கட்டுப்பாடுகள், பிரிவுகளை அதிகரித்து விடுவதோடு, மேலும் பதட்ட நிலைகள் ஏற்பட பங்களிப்பு செய்யும். அத்துடன் த.வி.பு பற்றிக் கலந்துரையாடுவதற்கு விதிக்கப்படும் தடைகள், ஆயுதப் போராட்டத்தின் வரலாற்றோடு பகிரங்கமாக தொடர்புபடுவதை தமிழர்களுக்கு கடினமானதாக ஆக்கிவிடும். இது விமர்சன ரீதியான உள்முக நோக்குக்கு முன்னிபந்தனையாக அமைகிறது.
நினைவுகூரும் செயற்பாடுகள் மீதான அரச ஒடுக்கு முறைகளை முடிவுக்கு கொண்டு வருவதென்பது, வட-கிழக்கில் வன்செயலிலிருந்து தப்பி இருப்போருக்கு அவற்றை நிகழ்த்தியவர்களைப் பற்றி கணக்கெடுக்காமல் உதவி, குணப்படுத்தும் செய்முறைக்கு வசதியேற்படுத்தும். இன முரண்பாடானது நீடித்து நிலைக்கக் கூடிய முறையில் தீர்க்கப்பட வேண்டுமாயின், அதில் பங்கெடுத்தவர்களும் அதனால் பாதிக்கப்பட்டவர்களும் சுயாதீனமாக நினைவு கூர அனுமதிக்கப் படவேண்டும். நினைவிற் பதித்தல் மீது அரசால் விதிக்கப்படும் தடைகளும் ஒருபக்க சார்பான கதைகளை வலிந்து திணிப்பதும் நாட்டை மேலும் பிளவுபடுத்தி விடும்.

## பின்னிணைப்பு - வட-கிழக்கிலிருந்து புகைப்படங்கள்





யாழ்ப்பாணத்திலுள்ள கிட்டுப் நினைவுப் பூங்கா 2005 ஆண்டு நினைவு தினத்தின் போது. 2016 இல் அதில் எஞ்சியிருந்தவை. இடம் தமிழ்நெற் வலம் பேர்ள் யூலை 2016





வல்வட்டித்துறை தீருவில் இருந்த LTTE போராளிகளின் நினைவுச் சின்னமும் அதில் எஞ்சியிருப்பவைகளும். இது 2010 இல் அழிக்கப்பட்டது.
(கோப்பு படம் : பேர்ள் ஓகஸ்ற் 2016)

வல்வட்டித்துறை தீருவில் இருந்த 12 போராளிகளின் நினைவுச் சின்னம் 90களின் முற்கூறுகளில் நிர்மாணிக்கப்பட்டு 2010இல் அழிக்கப் பட்டது.





வல்வட்டித்துறை தீருவில் இருந்த 12 போராளிகளின் நினைவுச் சின்னம் 90களின் முற்கூறுகளில் நிர்மாணிக்கப்பட்டு 2010இல் அழிக்கப் பட்டது.

(தமிழ்நெற் கோப்பு படம் வலம் போள் ஜனவரி 2016)






தேசத்தின் விடுதலைக்காக உயிர் தந்தோருக்கான" நினைவுச் சின்னம் -அதனுடைய திறப்பு விழாவின் போது –நவம்பர் 2005 (தமிழ்நெற்) பாதுகாப்பு படையினரின் நாச வேலையின் தற்போதைய தோற்றம் (பேர்ள் ஒக்ரோபர் 2016- தமிழர் நினைவு நிகழ்வுகளின் போது இன்னமும் பயன்படுத்தப்படுகிறது.





போர் நிறுத்தத்தின் போது மீள நிர்மாணிக்கப்பட்ட லெப். கேணல் திலீபனின் நினைவுச் சின்னம் (தமிழ்நெற்)
மீண்டும் அழிக்கப்பட்ட பின்னான தோற்றம் -செப்ரெம்பர் 2016 (தமிழ் காடியன்)






தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் வீடு போர்நிறுத்தத்தின் போது பின்பு அழிக்கப்பட்ட பின்னும் (கெற்றி பேர்ள் யூலை 2016)



அழிக்கப்படுவதற்கு முன் ஆட்காட்டி வெளி துயிலுமில்லம் (கோப்பு படம் தமிழ்நெற்)




அழிக்கப்பட்ட LTTE துயிலுமில்லத்தின் எச்சங்கள் ஒரு நினைவுச் சின்னமாக ஆக்கப்பட்டது – மீண்டும் அழிக்கப்பட்டது –கோப்பாய் யாழ்ப்பாணம் (தமிழ் நேஷன்)



துயிலுமில்லம். அறியப்படாத அமைவிடம். அழிக்கப் படுவதற்கு முன்னதாக (கோப்புப் படம் - வீரவேங்கைகள் - கொம்)




ரெலோ தலைவர்களான குட்டிமணி தங்கத்துரை மரணத்தை நினைவு கூரும் சுவரொட்டி, 1982இல் மரணித்த லெப். கேணல் சங்கரின் அழிக்கப்பட்ட நினைவுச் சின்ன் பீடத்தில் ஒட்டப்பட்டிருக்கிறது. வல்வெட்டித்துறை யாழ்ப்பாணம் (பேர்ள் யூலை 2016).




சிற்றாலயம் போன்ற இந்த கட்டமைப்பிலே LTTE இன் வீழ்ந்து விட்ட போராளிகளின் புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு வந்தன. எழுத்துக்கள் கறுப்பு மையால் மறைக்கப் பட்டுள்ளன. வல்வெட்டித்துறை யாழ்ப்பாணம்.



ஆலங்குளம் துயிலுமில்லத்தின் எச்சங்கள், மூதூர் கிழக்கு, திருகோணமலை (பேர்ள் யூலை 2016)



43. கொக்காவில் முல்லைத் தீவில் ஒரு சிறிலங்கா இராணுவ அதிகாரிக்கான நினைவுச் சின்னம் (பேர்ள் யூலை 2016)




“மனித நேய நடவடிக்கை” –ஐ நினைவு கூருவதற்கான நினைவுச் சின்னம் -கரடியனாறு மட்டக்களப்பு (மூலம் தெரியாது)

November 1, 2016
1629 K Street, Suite 300
Washington, DC 20006
Tel: +1.202.471.0009
contact@pearlaction.org
www.pearlaction.org

PEARL